ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஆவணி-மீ 6-உ (21—8—1932) | மலர் 17.



## டாக்டர் சிங்காரம்

## அவர்களின் மிகவும் குணமுள்ள

# கெந்தக நெய்

சாஸ்திரமுறைப்படி தயார் செய்யப்பட்டது
சிறுபிள்ளை முதல் சாப்பிடலாம்
இம்மருந்துக்கு யாதொரு பத்தியமில்லை

### இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன், கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலிகுன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை, கணுச்சூலை, பாரிசவாய்வு, முடக்குவாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை, கால், பிடிப்பு, மதமதப்பு, திமிர்வாய்வு, புண், புரைகள், ஆராதரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித தூர்நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக்கொடுக்கும்.

| | | |
|---|---|---|
| 60 வேளை மருந்து | விலை ரூ. | 10—0—0 |
| 20 ,, | ,, | 4—0—0 |

### உபயோகித்தவர்கள் சொல்வதைக் கவனியுங்கள்.

K. சீனிவாசராவ் அவர்கள் நேடிவ் டாக்டர், ஆஞ்சநேயவிலாஸ் மெடிக்கல் ஹால், அக்கரை கோட்டகம், தஞ்சாவூர்.

தாங்கள் அனுப்பிய கெந்தக நெய்யை உள்ளுக்குச்சாப்பிடவும் மகா சந்தனாதித்தைலத்தை ஸ்நானம் செய்யவும் எஸ். முருகேசன் என்பவருக்கு கொடுத்தேன் அவருக்கு ஒரு வருஷ காலமாக தேரக முழுவதும் ஒரு பைசா பிரமாணம் வட்டம் வட்டமாய் செம்மேக தடிப்புகள் இருந்ததும், அதில் நீர்வடிகிறதும், துர் நாற்றம் வீசுகிறதும் பார்ப்பவர்களுக்கு அருவெறுப்பை உண்டு பண்ணுகிறதுமாய் இருந்தது. அநேக இங்கிலீஷ், தமிழ், யூனானி முதலிய பலவித மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர் மேல்கண்ட தங்கள் மருந்துகளை உபயோகித்த 15 தினத்தில் அவருக்கிருந்த கடுமையான வியாதிகளெல்லாம் பூரணசுகமானது. அதனால் தங்கள் மருந்துகளின் பெருமையும் என் பெயரும் இவ்விடத்தில் விளங்கி வருகிறது.

மு. சத்தியதாஸ், மெடிகல் எவான்சலிஸ்ட்,
கல்லடிபட்டி, மதுரை.

தங்களின் கெந்தக நெய்யால் மானமதுரை துஷ்டரோக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறமுடியாமல் திருப்பி அனுப்பி விடப்பட்ட நோயாளியின் செம்மேக வியாதியைப் போக்கி நல்ல சுகத்தைக் கொடுத்தது. தங்கள் மருந்து மிகவும் சிறந்ததென்று என் வைத்திய அனுபோகத்தில் அறிந்து தங்களுக்கு என் நன்றியறிதலான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம், மலாய் நாட்டுவாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.
விலாசம் தெரிவித்தால் முழுவிபரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.
Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.
*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய லண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்படும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.
(1930-ஞூ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

**இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?**

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்
பூவிழல் !!
கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.
செவிடு !!
பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.
விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.
"Sri" Works
Beadon St. Calcutta.

ANANGARANGA BATIKA.
Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual intercourse. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs 8 only Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:
*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம. சிங்காரவேலு பி.எ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமை ஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை வினியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

குஷ்டம்
வெண்குஷ்டம் பத்து.
சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.
Post Box No- 11413
Calcutta- (k).

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வனாதம், வெற்றிலைக்கடை.
கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ
செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொளும்பு.
சிவன் கோவில் மேற்குமடம்
பருத்தித்துறை.

புதுவை
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி
ராஜவீதி.

# (Scientific Method and Ignorant Beliefs.)

## மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

### "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(6)

மெஞ்ஞான முறைப்படி மூடநம்பிக்கைகளை விசாரிக்கையில், அத்தியாதி நம்பிக்கைகள் எப்படி எழுந்திருக்கக்கூடும் என்றயோசனை முக்கிய யோசனையாகும். அவைகளை மூட நம்பிக்கை என்று தீர்மானித்ததில் மாத்திரம் போதா. அவைகளின் மூல ஆதாரங்களை (Origins) விசாரித்து அறிதல் வேண்டும். முன்கட்டுரையில் கூறிய மூடநம்பிக்கைகளின் சிலவற்றை எடுத்து விசாரிப்போம்.

ஒன்பது கருப்புப்பூனையும், ஒரு எட்டுக்கால்பூச்சும் (Nine black Cats and A spider) நல்ல சகுன பிராணிகளென, சிலர் கருதுகின்றார்களென கூறியுள்ளோம். இந்த ஜீவன்களை என்ன காரணத்தால் அல்லது என்ன விஷயத்தால் நல்ல சகுன ஜந்துக்களென எண்ண வந்ததென்பதை சற்று ஆராய்வோம். ஒன்பது கருப்புப் பூனைகள் எந்த காரணத்தையொட்டி நல்ல சகுன ஜந்துக்களாய் இருக்கக்கூடும்? மற்ற பூனைகளைவிட கருப்புப்பூனைகளுக்கு வந்தயோகமென்ன? ஒன்பது பூனைகள்சேர்ந்தால் என்னவிசேடம்? 5, 6, 7, 8 பூனைகளுக்கு என் விசேடமில்லாமல் போயிற்று? ஒன்பதென்ற எண்ணுக்குவுள்ள விசேடம்யாது?

எண்களில் ஒன்பது (9) உலகில் விசேடமாகவே எண்ணப்பட்டு வருகிறது. நவக்கிரகம், நவநீதி, நவமி, நவசக்கரம் என்று வழங்கும் சொற்களால் "நவம்" என்னும் ஒன்பது சாமான்ய எண்களுக்குமேல் கருதப்பட்டிருப்பதைக்காணலாம். இந்த பழக்கம் தொன்றுதொட்டு வந்துகொணடிருக்கிறது ஆதலின் ஒன்பதுக்குள்ள விசேடம் வெறும் பழக்கமே. எவனோ ஒருவன் ஒன்பது கிரகங்களென்றான். அந்த சொல்லே நாளதுவரை வழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. ஐந்தும் அவ்விதமே "ஐம்பூதம்" "பஞ்சமூர்த்தி" "ஐந்து கணங்கள்" "பஞ்சபாண்டவாள்" "பஞ்சசீலம்" "பஞ்சமாபாதகம்;' "பஞ்சரத்தினம்" "பஞ்சவடிவு;' முதலிய சொற்களும் பழக்கத்தில் வந்தவைகளே. இந்த புராண வழக்கத்தையொட்டியே சாதாரண எண்கள் (Numbers) விசேடமடைந்துள்ளன. இந்த பழக்கத்தைக்கொண்டே "ஒன்பது" கருப்புப்பூனைகளுக்கு விசேடம் வந்திருக்கவேண்டும். ஆனால்கருப்புபூனைகளுக்கு வந்த அபூர்வம் என்னவென்று கேட்கலாம்? பூனைகளில் கருப்புப்பூனைகளின் விசேடமென்ன? மந்திரங்களை கருப்புவித்தை (Black Art) என்று ஐரோப்பாவில்வழங்குவதுண்டு. பேய் பூதங்கள், கருப்பாடையை தரித்து இருப்பதாக பல கலைகளுண்டு. ஆதலின் கருப்பு ஒரே மந்திரத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதை நோக்கி கருப்பு வர்ணத்தையுடைய பூனையை (Magical Influence) மந்திர செல்வாக்குடைய மிருகமென எண்ணிஇருக்கக்கூடும். மந்திரத்தால் (Evil Influence) கெட்ட காரியம் தடுக்கப்படுமாகையால் அதே செல்வாக்கும் கருப்பு பூனைகளுக்கு இருக்கலாமென்ற கோரிக்கை (Wish) பழக்கத்தில் வந்திருக்கலாம். இந்த பழமையான பழக்கம் அரசசந்ததிகளிலும் காணலாம். எல்லோரைவிட அரசசந்ததியார் (Royal generation) பழக்கங்களை அதிகமாககையாளுகின்றவர்கள். இளவரசர் இந்த பழக்கத்தை கையாளுவது ஆச்சரியமில்லை. இது நமது உத்தேசமேயொழிய வேறில்லை. மெஞ்ஞான முறைப்படி காரண காரியங்களை விசாரிக்கையில் இந்த ஒன்பது கருப்பு பூனைகளை கூடவே வைத்துக்கொண்டு யாத்திரை செய்வதற்கு மேற்கூறிய நமது உத்தேசமே காரணமாக இருந்து இருக்கலாமென்று தோன்றுகிறது. எட்டுக்கால் பூச்சிக்கு வந்த மகிமை என்ன? எப்படி எட்டுக்கால் பூச்சி நல்ல சகுனமாக கருதப்பட்டிருக்கலாம். சில அர்த்தமில்லாத சடங்குகளைப்போல் இந்த எட்டுக்கால் பூச்சிக்கும் ஓர் மகத்துவம் வந்திருக்கக்கூடும். கர்மக் கிரிகைகளில் கங்கா, யமுனவென அடுத்தடுத்து புரோகிதர்கள் சொல்வதைப்போல் எட்டுக்கால் பூச்சியையும் பிரயாணங்களில் நல்ல சகுனமெனக்கருதி இருக்கக்கூடும். ஆனால் நமக்கோர் யுக்தி தோன்றுகின்றது. அதாவது ராபர்ட்டு புரூஸ் (Robert Bruce) என்ற ஸ்காட்லண்டு அரசன் (Scotish king) விடாமுயற்சியோடு எட்டுக்கால் பூச்சி தனது வீட்டை கட்டுவதைக்கண்டு தானும் அம்மாதிரியாகவே விடாமுயற்சி கொண்டு போர்புரிந்து கடைசியில் வெற்றிபெற்றதைப்போல் எட்டுக்கால் பூச்சி விடாமுயற்சிக்கு அடையாளமாக [Symbol) கருதப்பட்டு பிரயாணங்களில் அதனைகொண்டு போகின்றார்கள் போலும்! காட்டுமிராண்டிகள் முயல் எலும்புகளை நல்லசகுனமாக எண்ணி, தங்கள் பிரயாணங்களிலும், சண்டை முகங்களிலும், கொண்டுபோகின்றார்கள், இதுவும் ஓர் பழக்கமே. எவனோ ஒருவன் எட்டுக்கால் பூச்சி தன்னிடம் இருக்கக்கண்டு அவன் கோரிய விஷயங்கள் கைகூடவும் அந்த அதிர்ஷ்டத்திற்கு எட்டுக்கால் பூச்சிதான் அதிர்ஷ்ட பூச்சி என்று எண்ண வந்திருக்கலாம் அது, பழங்கதையாய் (Tradition) இருக்கலாம் அதே பழக்கமாக அரசகுமாரனும், எட்டுக்கால் பூச்சி அதிர்ஷ்டப்பூச்சி என்று எண்ணி இருக்கலாம்! அகஸ்மாத்மாக நடந்த ஓர் சம்பவத்தை காரண காரிய முறையாக வைத்துக்கொள்ளும் பழக்கத்தால் ஒன்பது கருப்பு பூனைக்கும் நல்ல சம்பவத்திற்கும் சம்பந்தமுளதாக எண்ணி வந்திருக்கலாம். இவ்விதமாகவே பல நல்ல சகுனங்களையும், கவனிக்க நேர்ந்திருக்கக்கூடும். எவனோ ஒரு மூக்கறையன் எதிர்படவும், அதே சமயத்திலோ, அல்லது சற்று நேரம் பிறகோ, எவனோ ஒருவனுக்கு கெடுதி நேரிட்ட நிமித்தத்தில் மூக்கறையன்தான் அதற்கு காரணமென எண்ணுவதைப்போல் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்த காரியத்தைக்கொண்டு அதே சந்தர்ப்பத்தில்தான், அதேமாதிரி நடக்கும் என்ற எண்ணம் உண்டாவது சகஜந்தான். இந்த மூக்கறையன் சகுனம், உலகமுழுமையுமே பரவியுள்ளதா எண்ணவேண்டிவருகிறது. "To cut off ones nose to spite ones enemy" என்ற முதுமொழி ஆங்கில பாஷையில் உண்டு. அதன்பொருள் என்னவெனில் தன்னுடைய பகையாளி கெட, தான்தன் மூக்கை அறுத்துக் கொள்ளல் என்றதை நோக்க மூக்கறையன் அட்சகுனமென்ற எண்ணம் பல இடங்களிலும் பரவியுள்ளதாகத்தெரிகிறது. நமது நாட்டிலும் இந்த சகுனக்கதை பழக்கத்தில் வந்திருப்பதையும் காணலாம். 'தனது பகையாளிக்கு சகுனப்பிழை உண்டாகத்தனது மூக்கறுத்துக்கொண்டு எதிர்நிற்கும் கதைபோல்" என்ற வசனம், நமது தெக்நாட்டில் வழங்கி வருகின்றது. இவைபோன்ற கதைகளால் என்ன நாம் யோசிக்கவேண்டி வருகிறதென்றால், ஏதேச்சாத் நேரும் காரியமொன்றைக் கொண்டு சாதாரண காரியமென்று சொல்லும் மனப்பான்மையால் இந்தச்சகுன அபசகுனக்கதைகள் உண்டாகின்றன. இந்த வழுக்கை ஆங்கிலதர்க்கத்தில் To generalise from particulars என்று கூறுவர். இந்த மனப்பான்மையைக் கொண்டே (Mentality) பலவித சகுன அபசகுன தோற்றங்களின் ஆதாரங்களைத்தெரிந்துக்கொள்ளக் கூடும். இங்கு சிலசகுன அசகுனங்களைக் குறிப்பிடுவோம்.

நமது நாட்டில் வழங்கும் சகுன அசகுன தோற்றங்களை இரண்டுவகையாகப்பிரிக்கலாம். உயிர்களால் உண்டாகும் சகுன அசகுனங்கள் ஒன்று உயிரற்றவைகளால் உண்டாகும் சகுன அசகுனங்கள் மற்றொன்று. உயிர்களால் நேரும் சகுன அசகுனங்களை முதலில் கவனிப்போம். மனித சகுனம் முதன்மையானது. அவைகளில் முக்கியமானவை, (1) ஒத்தைப்பாப்பான், (2) விதவை, (3) மாங்கல்ய ஸ்திரீ, இன்னும் சிலரை, கெட்ட சகுனமென சிலர் மதிக்கின்றார்கள். குருடன், மூடவன், நோயாளி, எண்ணெய் வாணியன் முதலிய சிலரை எதிர்ப்பட்டால் கெட்ட சகுனமாக எண்ணுவதற்கு ஆதாரம் என்ன?

ஒத்தைப்பார்ப்பான் எதிர்ப்பட்டால், என் ஒருவனுடைய காரியம் கெட்டுப் போகும்? இது மேற்கூறிய மனப்பான்மையால், உண்டாய் பழக்கத்தில் வந்திருக்கவேண்டும். இதனுடைய ஆபாசத்தை சற்று கவனித்தால், தெரிந்து கொள்ளலாம். ஒத்தப் பிராமணனை நமக்குத் தெரியாமல் எத்தனையோ தடவை சந்திக்கின்றோம். அதைப்பற்றி, யாதொரு விசாரப்படுவதில்லை.புறப்படும்போது எதிர்பட்டால் மாத்திரம், கெட்ட சகுனமாக மாறிவிடுவானேன்? பிராமணர் வசிக்கும் அக்கிராரங்களில், ஒத்தைப்பிராமணனை சந்திப்பது சகஜம் இதை எந்த பிராமணனும் கவனிப்பதில்லை. பிராமணரல்லாதார் என் இதை கெட்ட சகுனமாகக்கொண்டனரோ, அது விளங்கவில்லை. இரண்டாவது, ஒத்தைப் பார்ப்பான் எதிரிடல் அசகுனமென்றால், இரண்டு மூன்று பிராமணர்களை குறுக்கிடல், அதிகமான அசகுனமாகாமல், எப்படி சகுனமற்ற சம்பவமாயிற்றோ, அதுவும் தெரியவில்லை. ஆதலின் இது பழக்கச் சொல்லாய் விட்டதிலிருந்து, இந்த சம்பவத்தை கெட்ட சகுனமாக எண்ணுகின்றதாக யூகிக்கவேண்டி வருகிறது. இதன் ஆதாரத்தை நமது நிருபர்கள் தங்களுக்கு ஏதாகிலும் யுக்தி புத்திக்கு தெரிந்தவரை எடுத்துரைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். பலர் விசாரணையால்தான், உண்மை விளங்கும் என அறிக. ஒத்தைப்பிராமணன் எதிரிட்டால், கெட்டசகுனமென்பது யோசித்துப் பாராத, குருட்டுப் பழக்கங்களில் ஒன்று. "பார்ப்பான்" என்ற சொல் பழக்கச் சொல்லேயொழிய, அதில் விசேடமொன்றாகிலும், அல்லது கேவலம், ஏதாகிலும் ஒன்றுமில்லை. அவனும் எல்லா புருஷர்களைப்போன்றே ஒரு மனிதன். அந்த மனிதனை மாத்திரம் எதிரில் பார்த்தால்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க,

# பழந்தமிழர் கொள்கைகள்.

## சாதி, மதங்கள் அழிக.

## விஞ்ஞானக்கலைகள் வளர்க.

## கலப்பு மணத்தினாலேயே சாதி மதங்கள் அழியும்.

(துறையூரில் சென்ற 6, 7—8—31 சனி, ஞாயிறுகளில் கூடிய தமிழர் மகாநாடுகளின், தலைவர்கள், வரவேற்புத்தலைவர்கள், திறப்பாளர்கள் முதலியவர்களின் சொற்பொழிவுகளின் சாரங்கள்)

புலவர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த, திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் செய்த பிரசங்கத்தில் உள்ளவை:—

கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலிய நல்லியல்புகளில் உயர்ந்து விளங்கிய ஒருவனுக்கு மகனாகப் பிறந்தவன், அவ்வியல்புகளில் இழி நிலைமையுடையனாயின், தன்னை, இன்னார் மகன் என்று தெரிவித்துக் கொள்ளாமையே சிறப்பாகும். அதுபோல, பண்டைக்காலத்தே எந்நாட்டினும் சிறந்து விளங்கிய நம்நாட்டின் சிறப்பைப்பற்றி, இந்நாளில் இழிதகைமை எய்தியுள்ள நாம் எடுத்துப்பேசி மகிழ்வதில் யாதும் பயனின்றாம்.

ஃ ஃ

முற்காலத்துச் சிறப்பியல்புகளில் முக்கியமானவை: ஜாதிமத வேற்றுமை இன்மை; ஆடவரும் பெண்டிரும் தம்முள் மனமொத்து, மணம் புரிந்து மகிழ்ந்து வாழ்ந்தமை, பெண்டிரும் கல்வி கற்றுப்புலமை வாய்ந்திருந்தமை; புலவர் மாந்தராலும் மன்னராலும் போற்றப்பெற்று வாழ்ந்தமை; பெண்டிர் வீரமுடையராய் விளங்கினமை; மாந்தர் அக்கால நிலைக்கு வேண்டிய கருவிகளைக்கொண்டு கைத்தொழில் புரிந்தமை; திரைகடலோடி வாணிகம் செய்தமை; மக்கள் வீரத்தோடு போர் புரிந்தமை; வீரமக்களுக்குக் கல்நட்டமை; போர் செய்யும் முறைமை அறிந்திருந்தமை; இவை முதலிய பலவாம். இக்காலத்தே மேற்கண்ட செயல்களுக்கு மாறான செயல்களே நம்மிடத்து நடைபெறுகின்றன. அத்தகைய நல்லியல்புகள் நம்மிடத்து ஒரு சிறிதேனும் இக்காலத்தில் இருக்குமாயின் நாம் நலம் பெற்று நாகரீக முற்று வாழலாமே! அவையெல்லாம் மாறி, தன்னலமும் தற்புகழ்ச்சியும் கொண்டு, நாம் இவ்வுலகில் இடம் பெறாமல் ஏங்கியிருத்தல் அழகோ.

ஃ ஃ

சிறிது கற்றவர்களுக்கும் பெரிதும் பயன்படும்படி சிறியவும் பெரியவும் ஆன நூல்கள் வெளிவருதல் வேண்டும். பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி முதலிய சாஸ்திரங்களில் மேலாகவாவது அறிவுவேண்டும். தீக்குச்சியைக் கிழித்துத் தலைகீழாகப் பிடித்தால் நன்றாக எரியும் என்று பலரும் அறிவர். ஏன் அப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டால் மட்டும் காரணம் சொல்லத் தெரியாது. பஞ்சபூதங்கள் என்றால் இன்னவை என்று தெரியும். ஆயினும் அவை தனிப்பொருளோ கலவைப் பொருளோ என்று கேட்டால் சொல்லத் தெரியாது. இதுவரையில் கண்டுபிடித்துள்ள தனிப்பொருள்கள் எத்தனையென்றாலும் சொல்லத் தெரியாதே. நம்மவர் கிரகங்கள் ஒன்பதே என்பர். இக்காலத்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிரகங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை என்று சொன்னால் சிரித்துப் பரிகாசம் செய்வர். சூரியனுக்கும் ஒளிகொடுக்கும் கிரணங்கள் உண்டென்றும், சூரிய கிரணங்களைப் பிடித்து இரவில் மின்னொளி விளக்குகள் வைக்கப்போகிறார் என்றும் சொன்னால் உங்களுக்கு வெகு வியப்பாக இருக்கும். முடிவில் இதெல்லாம் ஆகுமோ என்பீர்கள். இவற்றையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது இன்றியமையாத தன்றோ?

ஃ ஃ

நமது நாடோ கல்வியிற் குறைவானது; கீழ்ப்பட்டது. நாகரிகம் பெற்ற நாடுகளில் எத்தனை பேர் படிக்கவில்லையோ அத்தனை பேரே நமது நாட்டில் படித்தவர்கள். இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் நூற்றுக்கு நாலைந்து பேருக்கும் குறைவாகும். ஜப்பான் தேசத்தில் நூற்றுக்குப் பத்திலும் குறைவாகும். நமது நாட்டிலோ என்றால் எழுதப் படிக்கக் கற்றவர்களின் தொகை நூற்றில் பத்துக்கு மேற்படாது. இக்குறையைக்கண்டால் கோயில்களை அடுத்துப் பாடசாலைகளை அமைக்கவேண்டுமென்பது எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தன்றோ?

ஃ ஃ

நண்பர்களே! பண்டிதர்களாகிய உங்களுக்கு ஒன்று சொல்லுவேன். உண்மையை உறுதிப்படக்கூறும்வன்மை வேண்டும். அதாவது. உண்மை கண்டு உண்மையை உரைத்தலாகும். எஃது உங்களுக்கு உண்மை என்று தோன்றுகிறதோ அதை உண்மையாக உரைத்தல் வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுதல் கூடாது.

ஃ ஃ

பண்டிதர்களுக்குப் பெரும்பாலும் செய்யுட் பாடத்திலேயே இஷ்டம் அதிகம். ஏனெனில், தாங்கள் சிறு வயதில் கற்ற பாடங்களே பெரும்பாலும் பாடமாக அமைக்கப்படுதலின் அவற்றைத் தம்மனம் போனவாறே கற்பித்து விடலாம் என்பதாகும். உரை நடைப்பாடங்கள் கதை ரூபமாக அமைந்திருந்தால் பண்டிதர்கள் மனத்தைக்கவரும். அதற்கும் மேற்கூறியதே காரணமாகும். விஷய உணர்ச்சியும் விஞ்ஞான சம்பந்தமான பாடங்களாகவும் இருப்பின் அவருக்கு அத்துணை விருப்பம் இராது; காரணம், ஒரு முறை இரு முறை பார்த்தால் ஒழிய அவற்றைப் பாடஞ் சொல்ல இயலாது.

ஃ ஃ

உவப்பும் உல்லாசமும் உண்டாகும்படி கற்பிப்பதே சிறப்பாகும். அதுவே தாய் மொழியில் மாணாக்கர்களுக்கு இன்பம் உண்டாகச் செய்யும் சிறந்த வழியாகும். பாடங்களைப்போதிக்கையில் உண்மை கண்டு உரைத்தலையே உபாத்தியாயர் தம் கொள்கையாகக் கொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாக "நண்டுசிப்பிவேய் கதலி நாசமுறுங்காலத்தில்" என்னும் செய்யுளைப் போதிக்கையில், நண்டு கருஉயிர்த்தால் இறந்துபடுகிறதா என்னும் விஷயத்தை உணர்ந்து சொல்லவேண்டும். அக்காலத்து இருந்த அறிஞர்கள் கண்ட உண்மை அது; இக்காலத்தில் உள்ள விஞ்ஞான சாஸ்திரிகள் அதன் உண்மையை உணர்ந்து, அஃது இறந்து படுகிறதில்லை என்கிறார்கள் என்று சொல்லவேண்டும். குளவி, புழுவைத் தன்னினம் ஆக்குகிறது என்பதன் உண்மையும் விளங்க உரைத்தல் வேண்டும். ஞான சாஸ்திரத்தில் கூறியிருக்கும் உதாரணமாயிற்றே; அதை எப்படிப் பொய்யென்றுசொல்லுவது! என்று நழுவ விடக்கூடாது. காலம் செல்லச்செல்ல ஆராய்ச்சி மிகும். ஆராய்ச்சி மிகவே உண்மை வெளிப்படும். ஆகவே முன் சொன்னவர்கள் கண்ட உண்மை அது; பின் வந்தவர்கள் ஆராய்ந்து சொன்ன உண்மை இது என்று பிள்ளைகளுக்குவிளங்கச் சொல்லவேண்டும்.

மாணவர் மகாநாட்டுக்குத்தலைமை வகித்த; திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் பிரசங்கத்தில் உள்ளவை:—

தற்கால உலகிற்கு ஆராய்ச்சி இன்றியமையாதது. அவ்வாராய்ச்சிக்குரிய பலதிறக் கல்வித்துறைகளைப் பயிலும் பருவம் எது? உங்கள் சீரிய செம்மைப்பருவம் என்று சொல்லவும் வேண்டுமோ? வருங்கால உலகுக்குரிய ஆக்கங்களைத் தம் மாட்டு மாணுற ஆக்கும் முயற்சியில் தலைப்பட்டுள்ளோர் மாணாக்கராவர் என்று சுருங்கச் சொல்லலாம். இப்பருவமுடைய நீங்கள் அல்லவோ நாட்டின் செல்வம்?

ஃ ஃ

"இஃதென்ன மாயம் உடல், இவ்விழிந்த உடலைப்போற்றி ஓம்பப்புகுதல்அறியாமை" என்று சிலர்சொல்வதுண்டு. அருமை மாணாக்கர்களே! இப்போலிக்கூற்றுக்குச் செவி சாயாதேயுங்கள். உடலை வெறுத்தல், பெண்ணை வெறுத்தல், மண்ணை வெறுத்தல், பொன்னைவெறுத்தல் முதலியவற்றைக்கொண்ட வெறுப்புத் துறவு, நாட்டிற்கு என்புருக்கி நோயாய் நாட்டை அலைத்து அரித்துக் குலைத்து வருகிறது.

ஃ ஃ

விஞ்ஞானத்துறையில் சிலபுதுமைகள் பிரஞ்சுக்காரரால் காணப்பட்டன, சில ஜர்மனியாரால் காணப்பட்டன; சில ஆங்கிலராலும் காணப்பட்டன; மற்றுஞ்சில மற்றவர்களாலும் காணப்பட்டன. அவரவர் தாம் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம்தம் தாய் மொழியில் வரைந்து விடுகிறார் அவைகள் பின்னே பல மொழிகளில் பெயர்த்தெழுதப் படுகின்றன. இம்முறையில் மேல் நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. அம்மொழிபெயர்ப்பு முறையை தமிழர்கள் கொண்டு ஏன் தாய் மொழியை வளர்த்தல் கூடாது?

ஃ ஃ

கலப்பு என்பது இயற்கை. உலகில் எம்மொழியும், எந்நாடும், எவ்வினமும், தோன்றியவாறே கலப்பின்றித் தனிமைத்தூய்மையுடன் என்றும் ஒரு பெற்றியாய் நிலவுதல் அரிது. அவைகளில் கலப்பு உறுதல் இயல்பு. அதைத்தகைதல் எவராலும் இயலாத தொன்று. ஒரு நாட்டில் மற்றொரு நாட்டார் புகுந்து அந்நாட்டில் நிலைத்து அந்நாட்டாரோடு கலந்துவிடுவாராயின் அவரும் அந்நாட்டவராகக்கருதப்படுவர். இதற்கெனச் சில நாடுகளில் சில விதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே உலகில் எவ்வினமும் கலப்பற்றதாயில்லை என்பது ஈண்டுக்கருதற்பாலது. கலப்பால் வளர்ச்சியே

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஒரு கன்யா ஸ்திரி போக விருப்பத்தினால் தன்னை விட உயர்ந்த ஜாதியானை தானாக வந்தடைந்தால் அவனைத் தண்டிக்கக் கூடாது (மனுஸ்மிருதி அத்தி-9. சுலோகம் 365)

ஒருவனுக்கு நிலமில்லாமல் வித்துள்ளவனுயிருந்தால் மற்றொருவனை யடைந்து உன்னிலத்தில் நான் பயிரிடுகிறேன், அப்பயிர் நம்மிருவருக்கும் பொதுவாயிருக்கட்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு பயிரிடுகிறதுபோல் ஒருவன் மனையாளிடத்தில் மனைவி இல்லாத மற்றொருவன் பிள்ளையையும் உண்டுபண்ணலாம். அந்த ஏற்பாடு இல்லாவிட்டால் உடையவனைச் சாருமென்பது பிரத்தியக்ஷமாகவே யிருக்கிறது. ஏனெனில் பீஜத்தைவிட நிலமுயர்ந்ததல்லவா? (மனு 9 அத்தியாயம் ஸ்லோகம் 52)

பிள்ளையில்லாமல் அந்தக்குலம் நசிக்கிறதாயிருந்தால் அப்போதந்த ஸ்திரீ தன் கணவன் மாமனூர் முதலியவர்களின் உத்திரவு பெற்றுக்கொண்டு தன் மைத்துனன் அல்லது தன் கணவனுக்கு ஏழுதலைமுறைக்குட்பட்ட பங்காளி இவர்களோடு மேற்சொல்லுகிறபடி புணர்ந்து குலத்திற்குத் தக்கதான ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொள்ளலாம் (மனு 9-59)

விதவை யிடத்தில் பெரியோர்களின் அனுமதி பெற்றுக்கொண்டு புணரப்போகிறவன் தன் தேகமெங்கும் நெய்யைப் பூசிக்கொண்டு இரவில் இருட்டான இடத்தில் அவளைப் புணர்ந்து ஒரே பிள்ளையை யுண்டுபண்ண வேண்டியது. (மனு 9-60)

ஒரு பிள்ளை யிருப்பதை பிள்ளையிராததற்கு சரியென்று சாஸ்திரம் சொல்லுகிறபடியால் இரண்டாவது பிள்ளையையும் உண்டுபண்ணலாமென்று புத்ரோற்பத்தி சாஸ்திர மறிந்த சில பெரியோர்கள் சொல்லுகிறார்கள் (மனு 9-61)

என்னும் நூல்களை யெல்லாம் மதத்தின் முக்கிய சாஸ்திரமாகப் பின்பற்றும் ஒரு நாட்டில் என் விபசாரம் பெருகாது? மேலும் பௌண்டரீக யாகம் எனும் மூடச்செயலினாலும் கொச்சி திருவாங்கூர் முதலிய மலையாள நாட்டில் பார்ப்பார்களை பூசுரர்களாகவும் அவர்கள் கூற்று வேதத்தின் சம்மதம் எனக் கடவுள் கூறியிருக்கிறார் என்கிற நம்பிக்கையினாலும் அந்நாட்டும் நம்பூதிரி பார்ப்பார்கள் "அறுபத்து நான்கு வகை" சையோக பேதங்கள் முற்றும் வழுவற அறிந்த கன்னிகைகளே சிறந்தவர்கள்" என்று கூறும் அயோக்கிய வார்த்தையை பூரணமாக நம்பி உயர்குலத்திலுள்ள அழகிய செல்வக் கன்னிகைகளுக்கு லீலைகளை கற்பிப்பதாக விபசாரம் புரிந்து அப்பெண்களின் பெற்றோரால் வெகுமதியும் சம்பளமும் பெற்றுவருவது இன்றளவும் நடைபெற்று வருகிறதாம். இன்னும் இந்துமத சாஸ்திரங்களை பண்டைக் கால முனிவர்களின் சரிதைகளையும், தேவர்களின் நடபடிக்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால் எங்கும் விபசாரமயமாகவே காணப்படுகிறது. மேலும் பாழும் இந்துமதத்தில் விதவைகள் மணஞ் செய்யக்கூடாதென்ற கொடுஞ் சட்டத்தினால் விதவையான இளம் பெண் மக்களுக்கு இயற்கையாய் எழும் உணர்ச்சியை அடக்கச் சக்தியற்று விபசாரம் புரிந்து அதனால் கருவுண்டாகி, கள்ளிக்காட்டிலும், வாய்க்காலிலும், குளத்திலும், சாக்கடையிலும் வீசி வருவது யாமெல்லாம் கண்டு வருமுண்மையேயாம். இன்னும் யாரும் அறியாமல் குழந்தை பெற்று சப்தமிடாது கழுத்தை நெரித்து ஆழக்குழி தோண்டிப் புதைத்து விடுவதும், குழந்தைகளைப் பெற்று அனாதை ஆச்சிரமங்களில் கொடுத்து வருவதும் யாமறிய முடியாததே. ஆங்காங்கு அனாதை விடுதிகள் பெருகிவருவதும், பிள்ளை நாளுக்கு நாள் கூடிவருவதும் நம்நாட்டில் விபசாரம் பெருகி வருவதை ஐயமறக்காட்டி வருகிறதன்றோ. அறுபது வயதுக்கிழவனுக்கும் பத்துவயது அழகிய சிறுபெண்ணிற்கும் ருதுவாகுமுன் விவாகஞ் செய்யவேண்டுமென்னும் வேத விதிப்படி பெயர்ப் பொருத்தம், லக்னப் பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம், லிங்கப்பொருத்தம், யோனிப்பொருத்தம், முதலிய எல்லாப் பொருத்தமும் பார்த்து வகஞ் செய்விப்பதும், பின்னர் குழந்தையில்லாமற்போவதும் தீர்த்தயாத்திரை செல்வதும், அங்கு இக்கிழவனிடமிருந்து வாலிபர் திருவிழாவிற்கு வரும் சில பெண்வேட்டையாடிகள் அடித்துகொண்டுபோய் சில நாட்கள் எங்காவது கொண்டுபோய் வைத்து விபசாரம் புரிந்து அவளிடமுள்ள நகை முதலியவற்றை யெல்லாம் ஏமாற்றிப் பறித்துக்கொண்டு அவளைக் கைவிட்டுவிடுவதும், அப்பெண் யாதொரு வழியுமறியாது பட்டினங்களில்போய் பகிரங்கமாய் விபசாரஞ்செய்து கொடிய வியாதிகளைப் பெற்று துன்பமெய்திச் சாவதும் நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். ஒத்த குணமும், ஒத்த அழகும், ஒத்த படிப்புமில்லாத ஆண் பெண்களைதாய் தகப்பன்மார்கள் தங்கள் வசதிக்கேற்ப ஜோடி சேர்த்து விடுவதால் பின் அவர்கள் ஒருவருக்கொருவர் பிடித்தமில்லாதவராகின்றார்கள். நம் மதம் அப்பேர்பட்டவர்கள் விவாகரத்துச் செய்துகொள்ள இடங்கொடாததால் அப்பெண் தனக்குப் பிரியமான ஒருவனைக் காதலித்து அவனோடு கள்ளத்தனமாய் புணர்ந்து வருவதும் அதினால் நாட்டில் ஏற்படும் கொலையும், களவும், அடி தடி கோர்ட்டு விவகாரங்களும் கணக்கிலடங்கா.

இன்னும் இஸ்லாமதத்தினர் சமாதிப்பூஜை, பஞ்சா பூஜை முதலிய பல விழாக்களில் துலுக்கத் தாசிகள் என்னும் ஒரு கோஷ்டியார் ஏற்பட்டு ஆடல் பாடல் புரிந்து ஆண்டு குழுமும் வாலிபர்களை தம் வயப்படுத்தி விபாசாரத்தினால் பணம் சம்பாதித்து வருகின்றார்கள். இன்னும் பல வைதீக முஸ்லிம்கள் எங்கள் மதத்தினர் கலியாணஞ் செய்வதோடு பிறசமயப் பெண்களை (அடிமைகளை) வைப்பாக வைத்துக்கொள்ள அனுமதிக்கிறது என்றும், அவ்வாறே எங்கள் நபிகள் நாயகம் நாற்பது வைப்பாட்டிகள் (ஸுரிய்யத்) வைத்திருந்தார்கள் என்று கூறுவதுடன் பல புராண ஆதாரங்களை எடுத்தியம்புகின்றார்கள் (இவைகள் இஸ்லாத்திற்கு முற்றும் மாற்றமானது என்று சில சீர்திருத்தவாதிகள் கூறிவருவதை யாம் அறிவோம்) இன்னும் புத்தமதத்திலுள்ள மஞ்சக்காஷாயம் பூண்ட துறவிகள் என்னும் கூட்டத்தார்களை பிரமச்சாரிகள் என்று கூறி பல பெண்களை ஏமாற்றி விபசாரக் குழியிலாழ்த்திவருவதையும், சைவ, வைணவ மடாதிபதிகளால் ஏற்படும் விபசார தோஷமும் அளவிட்டுரைக்க முடியா. இந்த விபசாரங்களுக்கெல்லாம் தாயாக இந்துமதமே மிளிர்கிறது என்பதை யாவரும் நன்கறிவர். எனவே மக்கள் கடவுள் வாக்கு, வேதத்தின் சம்மதம் என்று கூறியஉடனே நம்பி நடவாத தங்கள் பகுத்தறிவை உபயோகித்து நடந்து வந்தால் எந்த மார்க்கத்திலும் விபசாரம் பெருக இடமே இல்லை. கடவுள் பக்தியும் மதவெறியும் அதிகமுடையதாய் ருஷிய தேசமிருந்த பொழுது தேச முழுதும் விபசாரத்தில் ஆழ்ந்திருந்தது. ருஷிய தேசத்தின் தலைநகரில் மட்டும் 25000 வேசிகள் இருந்து வந்தார்கள். கடவுள் வெறியும் மதவெறியும் ஒழிந்து விட்டதால் இன்று விபசாரிகள் மருந்திற்கும் காண முடியாததாய்ப் போய்விட்டதென்பதை நீங்களெல்லீரும் பத்திரிகை வாயிலாய் படித்திருப்பீர்கள். நாட்டில் நடைபெறும் விபசாரத்திற்கெல்லாம் மூலகாரணமாய் நிற்பது கடவுளும் மதமுமேயாகும். விரித்துக்கூறினால் இஃதோர் விபசார புராணமாய் மாறுமென்று எண்ணி இத்துடன் நிறுத்தப்படுகிறது.

கொலை செய்யத்தூண்டுகின்றது.

அறிஞர் ஒருவர் கடவுள் பக்தி அபினிக்கு சமானமாயிருக்கிறது என்றார். கடவுள் பக்தி அதிகமுடையோர் வெறிகாரர்போன்று மயக்கமுற்று, அறிவிழந்து, அன்பிழந்து தம் கடவுளுக்கோ அன்றி மதத்திற்கோ விரோதமாய்ப் பேசுகிறவர்களையும், எழுதுகிறவர்களையும், சித்திரவதை செய்யவும், கொலை செய்யவும் தைரியமாய் முன்வருகின்றனர். அவ்வாறு செய்வது புண்யமான செயல் எனவும், கடவுளுக்கும் மதத்திற்கும் விரோதியாயுள்ளோர்களைக் கொல்லாதிருத்தல் கொடியபாவம் என்று எண்ணுகின்றனர். அவர்கள் மதமும் அவ்வாறே தூண்டுகிறது. மதத்தாலும் கடவுளாலும் இறந்தவர்களே உலகிற் பெரும்பாலர் என்பதையும், கடவுள் பக்தி மிகுதியுமுடையோர் இறக்கமற்ற வன்னெஞ்சக் கயவர்களாய்ப் போய் விடுகிறார்கள் என்பதையும் கீழ்க்கண்ட சரித்திரங்களே சான்று பகிர்கின்றது.

புரோட்டெஸ்ட்டாண்டு மதக்கிளர்ச்சிதோன்றிய பொழுது அம்மார்க்கத்தை தழுவினவர்களை விசாரிக்ககத்தோலிக்கர் ஒரு கோர்டு ஏற்படுத்தி 30 வருஷங்களில் லட்சத்து ஐம்பதினாயிரம்பேரைக் கொலை செய்துவிட்டார்களாம். யெசுயிற்ஸ்(Jesuits) என்னும் ரோமச்சபையின் உபத்திரவத்தால் அது ஆரம்பிக்கப்பட்ட 1540 ஆம் ஆண்டுதுவக்கி 1580 ஆண்டுவரைக்கும் ஒன்பது லட்சம் பேர் அநீதியாய் கொலையுண்டார்களாம். அல்வா நாட்டின் டியூக் என்னும் அதிபதியும், பிறரும் செய்த உபத்திரவத்தால் உலாந்து (Holland) நாட்டுப் பகுதிகளில் ஐம்பதினாயிரம் புரோட்டெஸ்டாண்டு மதஸ்தர் கத்தோலிக் மதத்தைவிட்டு விலகியதற்காக தூக்கிலிடப்பட்டும், சுட்டெரிக்கப்பட்டும், சிரச்சேதம்பண்ணப்பட்டும், உயிரோடு புதைக்கப்பட்டும் மாண்டார்கள். பிரான்சுதேசத்திலே பார்த்தலேமேயு என்னும் சங்காரத்திலும், இங்கிலாந்திலே இரத்தமரியாள் என்னும் ராஜாத்தியின் சங்காரத்திலும், போப்புமார்க்கத்தைபரப்பச்செய்த சகல சண்டைகளிலும் இறந்தசேனாவீரர்களையும் இந்த தொகையுடன் கூட்டவேண்டும்........உவால்டென்சர், அப்பிசென்சர், பொகீமியர் உக்கிஷலீவர் முதலிய புரோட்டஸ்டெண்டுகளில் ஐந்துகோடி இரத்தம் சிந்தப்பட்டது. கத்தோலிக்க மதத்தை பரவச்செய்ய போப்புவின் உத்தரவுப்படி ஸ்பானியர் செய்த யுத்தங்களிலும், கியூபாவிலும், மெக்சிகோவிலும், தென் அமெரிக்காவிலும் ஒரு கோடியே ஐம்பது லட்சம் அமெரிக் இந்தியர்களின் இரத்தம் சிந்தப்பட்டது. ஸ்பானியாவில் (Spain) மூன்றரை லட்சம் யூதரும் சோனகரும் இந்த கத்தோலிக்கர்களால் கொலையுண்டார்கள். அப்படியே ஆறு கோடியே எண்பத்தைந்து லட்சம்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# கதரை ஆதரித்தல் அறிவுடைய செய்கையா?

(எம். கலியாணசுந்திரம்.)

III

அகில பாரத சர்க்கா சங்கம், என்னும் கதர் போர்டாரிடம் பொது ஜனங்கள் உதவியால் சேர்ந்துள்ள கதர் நிதியை அவர்கள் எவ்வளவு நியாயக்குறைவாகவும், கவனக் குறைவாகவும் நிர்வகித்து வருகிறார்கள் என்று கவனிக்கப்புகுமுன், அந்த நிதியை யார் நிர்வகித்து வருகிறார்கள்? அந்த நிர்வாகிகள் பொது ஜனங்கள் சம்மதத்திற்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? அந்த கதர் நிதிக்கு நிர்வாகிகளை எப்படி தேர்ந்தெடுத்து வருகிறார்கள் என்பதை கவனித்தால் கதர் ஆரம்பத்தின் சில அடிப்படையான விஷயங்கள் புலப்பட சாத்தியமாகிறது.

அகில இந்திய சர்க்கா சங்கத்திற்கு சில வருஷங்களாக நடைபெற்றுவருகிற நிர்வாக மெம்பர் தேர்தல் முறை எவ்வாறென்றால், அந்த கதர் நிதிக்கு பொருளுதவிசெய்ய இந்த நாட்டிலுள்ளவர்களும், வெளிநாட்டிலுள்ளவர்களுங்கூட யாதொரு தடங்கலுமின்றி லாயக்கானவர்களாகவும், சுமார் 32 கோடியுள்ள இந்த தேச ஜனங்களின் நன்மைக்காக என்று லக்ஷக்கணக்கில் தொகை சேர்த்து நடத்தும் அந்த நிதிநிர்வாகத்துக்கு அகில இந்தியாவுக்கும் 7 அல்லது 9 நிர்வாகிகளே போதுமானதாயும், அத்தகைய ஒரு சபைக்கு தகுந்தவர்களை தேசம் பூராவிலும் உள்ள ஓட்டருக்கு லாயக்கானவர்கள்தேர்ந்தெடுக்கும்படியும், பலவேறு பாஷைகளுடனும் இயற்கை அமைப்புடனும் நாடெங்கும் சிதறியுள்ள ஒவ்வொரு கிராமவாசியும், ஒரு ஓட்டராக தன்னை ஏற்படுத்திக்கொண்டிருந்தால் தபால் மூலமாய் "ஆமதாபாத்" போன்ற ஓர் இடத்துக்கு தனது அபிப்பிராயத்தைக்காட்டி தனது வாக்கு உரிமையை அனுப்பினால் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதாகதிட்டம் அமைத்திருக்கிறார்கள்.

மேற்படி கதர்நிதிக்கு எவ்வளவு பொருளுதவி செய்தவர்களாயிருந்தபோதிலும், இதரவகையில் எவ்வளவு தியாகம் செய்தவர்களாக இருந்தபோதிலும், எவ்வளவு தூரம் கதரை ஆதரிப்பவர்களாக இருந்தபோதிலும் எவ்வளவோ கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவராகஇருந்தபோதிலும், அந்த கதர்போர்டு நிர்வாகிகள் தேர்தலுக்கு ஓட்டர் ஜாப்தாவில் சேரலாயக்கில்லாதவர்களாகவும் ஆனால் மாதம் 1000 கஜம் நூல் அனுப்பித்தட்சி செய்து ஓட்டர் ஜாப்தாவில் பதியப்பட்டிருந்தால் அவர்களை வாக்களிக்க லாயக்குடையவர்களாயும் கதரைப்பற்றி எடுத்துச் சொல்லி தொகை சேர்த்து நிர்வகிக்கும் கதர் போர்டார் ஓர் நவீனமுறையை கையாண்டு வருகிறார்கள்.

இதில்உள்ள விசேஷமென்னவென்றால் கதர் நிதிக்கு இவ்வளவு தொகைக்குமேல் பொருளுதவி செய்தவர்கள் ஓட்டு கொடுக்க லாயக்குடையவர்கள் என்றாவது ஏற்படுத்தாமலும், கதர் தயாரிப்போராகவும், கதர் வாங்கி உடுத்த வருபவராகவும், கதர் விருத்திக்கு பொருள் ஈடுபடுத்துவோரான வியாபாரிகளாகவும், கதரபிவிருத்தி துறைகளை விருத்தி செய்யும் இயல்பு கூடிய பிரசாரகர்களாகவும், கதரை ஆதரிப்போர்கள் பெருவாய் நாட்டில் பெருகியிருந்தும் அவர்களை ஓட்டு கொடுக்க லாயக்குடையவர்கள் என்றாவது ஏற்படுத்தாமலும், தங்கள் நிர்வாக ஸ்தாபனத்தின் கீழ் வேலைபார்க்கும் ஒருவர் பதிந்து வரவேண்டியதாய் அமைந்த புஸ்தகத்தில் ஓட்டராக பதியவேண்டிய அவசியத்திற்காக மாதம் தவணை தவறாமல் நூல் அனுப்பிவர முற்படும் வெளிமக்களை மட்டில் ஓட்டருக்கு லாயக்காக செய்த திட்டம் வகுத்திருப்பது, எவ்வளவு தூரம் கதரில் உடல் பொருள் ஆவியையும் ஈடுபடுத்திய ஒரு குடும்பத்தினையும் விலக்கிவிட்டு அதற்கு எவ்வளவும் ஈடுதராத வேறு சிலரை ஓட்டராக்கவும் இடந்தருவதாய் இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

சுமாராக வருஷம் பத்தாக இவ்வித தேர்தல் திட்டத்தை மாற்றக்கவலைப்படாத நிர்வாகிகள் இருந்து வருகிறார்கள் என்பதைக்காணும் போதே, கதர்பேரால் தங்கள் கைக்குபொருள் சேற ஆசைப்பட்டார்களே தவிர கதர் விருத்திக்கான துறையில் பொது ஜனக்கள் முன்பிரசாரம் செய்து உழைக்க பொருள் சேர்த்தார்கள் என்று கருத இடமிருக்கிறதா என்பதையும் கவனிப்போமாக!

இந்த தேர்தல் முறையானது, மகா ஜனங்களில் 100 க்கு 75 பேரை ஓட்டராகதவர்களாக விலக்கிவிடவும் அக்கதர் போர்டாரின் நிர்வாக நடை முறையானது ஓட்டராக ஏற்பட்டவர்களுக்குள்ளும் 100 க்கு 75 பாகத்தாரை ஓட்டு கொடுக்க சாத்தியமேற்படாத படியும் தடுத்துவிடுவதற்கு ஏதுவாய் அமைந்திருப்பதால் அதாவது தேர்தல் நடைபெற வேண்டிய காலம் ஒன்று வருவதை பல்வேறு இடத்திலமையும் பிரதி ஓட்டரும் லகுவில் அறிந்து கொள்ளத்தக்க சாதனம் எதுவும் அதற்கென (கதர்) எளிய சந்தாவில் நடத்தி வந்த "குடி நூல்" போன்ற பத்திரிகைகளைக் கொண்டு அமைக்காமலும் ஓட்டுக் கொடுக்கவேண்டியவர் யார், லாயக்கற்றவர்கள் யார், ஓட்டுக்கொடுக்க வேண்டிய விதப்படி ஓர் போட்டியின் கீழ் அவசியமாயிற்று என்ற சந்தர்ப்பம் அறியக்கூடியதர்க்கும் அந்தந்த சமையங்களுக்கு பிரதி ஓட்டர்களுக்கும் வெளியிட வேண்டிய விஷயங்களை வெளிப்படுத்த தக்ககுதியான திட்டத்தில் தங்களை அமைத்துக் கொள்ளாமல் நிர்வாகம் நடத்தி வருவதால், பொது மக்களில் சுமாராக 100 க்கு 6 பேர்ஓட்டு கொடுக்க ஏதுவாக இருந்துவருகிறது அப்படியுள்ள அந்த, '6 பேரிலும்' தேர்தல் நேரும் சமையத்தில் தங்கள் சுயசௌகரியங்களை அனுசரிப்பதால் பாதிக்கப் படுவோரும், தேர்தலில் கலந்துள்ள மெம்பர்களில் பலர் நிலைமையை ஒவ்வொரு ஓட்டரும் நன்கு அறியக்கூடாத நிலைமையில் ஒரு பெருந்தேசத்தின் எந்த பாகத்திலோ தோன்றி, அவ்விடத்து உழைப்பில் அவர்கலந்து கொள்ளும் வகையை காண முடியாத தூரத்தில் ஓட்டர்கள் அமைவது காரணத்தால் இத்தேர்தலில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என்று விலகுவோரும் மேலே கண்டபடி தலைமையான சங்கத்தாருக்கு விசால நோக்கமும் (அஸ்திவாரபலமான) மகாஜனங்களின் உண்மைப்பிரதி நிதித்துவமும் இல்லாத இத்தேர்தல் முறையில் கலந்து கொள்வதில் பலனில்லை என்று ஒதுங்கி விடுவோரும் போக இது எப்படி விசாலமற்ற திட்டம் என்று கண்டு கொள்ளாத (நிதானித்துஅறிய முடியாத) நிலையிலுள்ள பக்தர்கள் சிலரும், விசாலமற்றதாய், ஒரு தலைப்பட்சமாய்,

இவ்வித முறையில் நிர்வாகங்கள் இருப்பதாலெல்லாம் தங்களுக்கு நலம்உண்டு என்று கருதும் சுயநல நோக்கே கருவாய் பிறந்த கோஷ்டியினர் சிலருமாக, 'தேர்தலில் கலந்து கொள்ளக்கூடியவர்கள் பொது மக்களில் 100 க்கு ஒருவர்தான் உண்டோ என்று ஐயுறும்படி தேர்தல் முறையை ஓர் அரண்போல தங்களுக்கு அமைத்துக் கொண்டிருப்பதால்; நிர்வாகிகள் நடைமுறையை பல ஓட்டர்கள் நேரில் கண்டு கவனிக்கும்படியாகவோ, பல ஓட்டர்கள் கவனிக்கும் படியாயிருக்கிறதே என்று ஒரு நிர்வாகியோசித்து ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளவோ சந்தர்ப்பம் நேராமல் நிர்வாகிகள் இஷ்டபோகம் அனுபவிக்க இடம் கிடைப்பதில், கதர் நிதியை தேசமக்களின் அடிப்படையான தர்மம் என்று சொல்லிக்கொண்டே, ஒரு சிலர் தங்களுக்குள் நிர்வாகத்தை பரிமாறிக்கொள்ள ஏதுவாக அந்த நிர்வாகம் நடந்து வருகிறதே தவிர உண்மை உழைப்புக்கு இடம் இருக்கிறதா? என்று கவனிப்போமாக!

ஏழைபங்காளன், மகாத்மா காந்தி என்று கூச்சலிடுவதற்கு பலபிரபுக்களும் படித்தவர்களும் இருக்கிறார்களே தவிர ஒரு பெரும் நிதியின் நிர்வாகத்திற்கு மேற்சொன்னபடி 1000 கஜம்நூல் அனுப்பிவருவோர் ஓட்டர்களே தவிர அந்தசர்க்கா சங்கத்தின் கீழ்தினம் 4000 கஜம் நூல் நூற்றுக்கொடுக்கும் நூல் காரர்களெல்லாம் ஓட்டர்கள் ஆகினார்கள் என்றாவது, அச்சங்கத்தின்கீழ் அல்லாமல் அடுத்துள்ள வியாபாரிகளிடம் அப்படி நூற்றுக் கொண்டே இருப்பவர்களாவது ஓட்டர்களாகிறார்கள் என்றாவது இதுவரை யேற்பட்டதாய் காணமுடியாதபோது கதரபிவிருத்திக்கும், ஏழ்மையுள்ளார் முன்னேற்றத்துக்கும் நிரந்தமாய் உழைக்க நிர்வாகிகள் முற்படவில்லை என்று ஏற்பட வில்லையா?

மேலும் கவனித்தால் நிர்வாகத்தில் உள்ளோர் கண்காணிப்பின் கீழ்தொழில்செய்ய நேருவோர் அவர்களை மாற்றி வேறொருவரை அப்பதவிக்கு தேர்ந்தெடுக்க விரும்பினால் மூன்றாமவர் கண்காணிப்பில் தேர்தல் விஷயங்கள் வெளிவர இடந்தருகின்றார்களா? தருவார்களா? என்பதும் ஊன்றிகவனிக்க வேண்டிய ஒன்று

இந்த இருபதாம் நூற்றாண்டில், ஆங்கில அரசாங்கத்தின் கீழ், மாகாணசட்டசபைக்கும், இந்தியா சட்ட சபைக்கும்பிரதி தாலூகாவிலும் 5-6 போலிஸ் ஸ்டேஷன்களுடன் ஆயிரக்கணக்கான மக்களின் ஓட்டுரிமையை உபயோகப் படுத்திக்கொள்ளும் தற்கால சட்டத்தை போதுமானதல்லவென்று, அவதூறு சொல்லும், திரு காந்தி வர்க்கத்தாரே, தங்களிடம் சிக்கிக்கொண்ட தொகைக்கு கிரமமான முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவசியத்தை உணரவில்லை என்று சொல்லக் கூடுமா?

அந்த சங்க நிர்வாகத்திலுள்ள மெம்பர்களும், ஊழியர்களும் பூராவாக ஓட்டருக்கு லாயக்காகும்படி மாதம் 1000 கஜம் நூல் அனுப்பி சந்தாதாராக இருக்க வேண்டுமென்றிருப்பதால் தங்களைப்போல் வெளிமக்களையும் பாவித்து திட்டம் வகுத்ததாய் சிலர் சொல்லக்கூடும். அதுவும் ஓர் ஆலசிய கொள்கையின்பாற்பட்டதே!

நூல் சந்தாதார்கள் தாங்கள் நேராக நூற்றதோ, பிறர் நூற்க வாங்கியதோ எதையும் எ. பி., என்ற பிரிவில் காட்டி அனுப்பிவரலாம். கதர் நிதியின் நிர்வாகிகளும் ஊழியர்களும் நூல் நூற்றுக்கொடுப்போரும் நூல் வாங்கி நெய்து கொடுப்போரும் நிறைந்துள்ள இடங்களில் அமைந்து சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை பார்ப்பவராதலால் சந்தா நூலை தங்களுக்கு கட்டுப்பட்டுள்ளவர்களிடம் இனமாகவோ, நிர்ப்பந்தமாகவோ

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# கோயில்களும், மடங்களும் ஏன்?

[சாமி. சிதம்பரனார்]

நமது நாட்டு ஏழைமக்கள் அடைந்து வரும் துன்பத்தை அறியாதவர்கள் தற்காலத்தில் எவரும் இலர். வைதீகர்களும், அறிந்திருக்கின்றார்கள்; சீர்திருத்தக்காரர்களும் அறிந்திருக்கிறார்கள்; அரசியல் வாதிகளும் அறிந்திருக்கின்றார்கள். இதனை தற்காலத்தில் வைதீகர்கள் எழுதுகின்ற எழுத்துக்களிலும், பேசுகின்ற பேச்சுக்களிலும், சீர்திருத்தக்காரர்கள் எழுதுகின்ற எழுத்துக்களிலும், பேசுகின்ற பேச்சுக்களிலும், அரசியல்வாதிகள் எழுதுகின்ற எழுத்துக்களிலும், பேசுகின்ற பேச்சுக்களிலும் காண்கின்றோம். அவர்கள் ஏழைமக்களின் துன்பத்தைப் பற்றிக் குறிப்பிடாமலிருப்பதில்லை. ஏழைமக்களுக்கு அறிவுபுகட்ட வேண்டும்: அவர்கள் வறுமைப்பிணியைப்போக்க வேண்டும்; அவர்கள் மனமகிழ்ச்சியோடு வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும் என்று சொல்லாமல் விடுவதில்லை.

உண்மையிலேயே ஏழைமக்கள் துயரம் ஒழியவேண்டும் என்று கருதுகின்றவர்களும் மேற்கண்டவாறே பேசுகின்றார்கள். ஏழைமக்கள் ஏழைமக்களாகவும், பணக்காரர்கள் பணக்காரர்களாகவும், தாழ்ந்தவர்கள் தாழ்ந்தவர்களாகவும், உயர்ந்தவர்கள் உயர்ந்தவர்களாகவும், இருந்தால்தான் இந்திய நாகரீகம் அழியாமலிருக்கும்; வைதீகம் ஒழியாமலிருக்கும்; மதக்கொள்கைகள் மாறாமலிருக்கும்; என்ற எண்ணமுடையவர்களும் மேற்கூறிய வாறே பேசுகின்றார்கள்.

இதிலிருந்து நமக்குத் தெரியும் உண்மைமாத்திரம் ஒன்று உண்டு. அதாவது: ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமையிலும், வறுமையிலும் அகப்பட்டு இயற்கை இன்பங்களை துய்க்க முடியாமல் வாழ்ந்திருந்த மக்கள் அனைவரும் இக்காலத்தில் தங்கள் அடிமையையும் வறுமையையும் உதறி யெறிந்து விட்டு மக்கள் கூட்டத்தோடு ஒன்றுபட்டு வாழவிரும்புகிறார்கள். இதற்குத்தடையாக நிற்பவை மதமோ, கடவுளே கலைகளோ, செல்வமோ, அதிகாரமோ எவையாயிருப்பினும் அவைகளையெல்லாம் அழிப்பதற்கும் பின்வாங்க மாட்டார்கள் என்பதை அவர்கள் முன்னேற்றத்திற் கருத்தில்லாத வைதீகர்கள் உணர்ந்திருக்கும் காரணத்தாலேயே அவர்களும் மேற்கூறியவாறு வாயளவில் "ஏழைமக்கள் துயரம் அகலவேண்டும். என்று பேசுகிறார்கள். இவ்வாறு பேசுவதனால் அவர்களுக்கு ஒரு பொருட்கேடும் ஏற்படுவதில்லை, இதற்கு மாறாகப்பதவி களும், பட்டங்களும் பெறுகிறார்ககள் என்பது நாம் கண்கூடாகக்கண்டறிந்த உண்மையாகும்.

ஏழைமக்களின் துயரங்களை ஒழிக்கவேண்டும் என்று உண்மையாகப் பேசுகின்றவர்களுக் குள்ளும், எவ்வாறு ஒழிப்பது என்று அதற்குரிய வழிகளை ஆராயும் வகையில் கருத்து வேறுபாடுகள் நிகழ்வதும் இயல்பாக இருக்கிறது. இக்கருத்து வேறுபாடுகளுக்கும் காரணம், சிலவற்றில் உள்ள அபிமானமும், மூடநம்பிக்கைகளுமே ஆகும் என்பதை யாரும் மறுக்க வொண்ணாது சீர்திருத்த வேட்கையுடையவர்கள் பால் மேற்கூறிய அபிமானமும், மூடநம்பிக்கையும் இல்லாமல் ஒழியுமாயின், அவர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டாவதற்கு எள்ளத்தனையும் இடமில்லை என்பதே நமது எண்ணமாகும்.

பழமையாக இருந்து வரும் சில செயல்கள் தற்காலத்தில் ஒரு வகையிலும் மக்கள் குழுவிற்கு உதவியாகாமல் வீணே நிலைத்திருக்குமாயின், அவற்றை அழித்துப் பொதுமக்களுக்குப் பயன்படுத்தும் வகையில் சீர்திருத்தக்காரர்கள் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாயிருத்தல் வேண்டும் இக்கருத்து எல்லோர்மாட்டும் தோன்றுதல் அரிது; அபிமானமும் மூடநம்பிக்கைகளும் அற்றவர்கள் மாட்டே காணப்படும்.

இனிமேற் கூறியவைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக சில சொல்லுகின்றோம். இப்பொழுது நமது நாட்டிலிருக்கும் கோயில்களைச் சிறிது உற்று நோக்குவோம். இவைகளுக்குள்ள எண்ணற்ற சொத்துக்களில் நாட்டிற்கு என்னபயன் உண்டாகிறது? இவைகளை ஆண்டுஅனுபவித்து இன்புறுபவர்கள் யார்? அவர்களால் தான் யாருக்கேனும் ஏதேனும் பயன் உண்டா? என்ற இன்னோரன்ன கேள்விகளை நீங்களே உங்களுக்குள் கேட்டுக் கொள்ளுங்கள், அவைகளுக்குத் தகுந்த விடைகள் கிடைகின்றனவா? என்றும் ஆராய்ந்து பாருங்கள்!

அடுத்தபடியாக இந்தக்கோயில்களுக்கு ஒவ்வொரு நாளும் ஆகும் செலவு எவ்வளவு? மாதங்கள் தோறும், ஆண்டுகள்தோறும் நடைபெறும் திருவிழாக்களின் பொருட்டு அழியும் பொருள்கள் எவ்வளவு? இந்தக்கோயில் களைக்கண்டால், இக்கோயில்களில் உள்ள பதுமைகளையோ, குழவிக்கல்லுகளையோ பார்த்து வணங்கினால், அவைகளின் தலையில், மக்களுக்குப்பயன்படும் பால், தேன், நெய், சீனி, பழம் போன்ற பொருள்களைக் கொட்டினால் தாங்கள் செய்த "அக்கிரமங்கள்" தொலைந்து போகும் என்று நம்பி பொருளைச்செலவு செய்து கொண்டு ஊர்விட்டு ஊர் போகும் ' மக்களுக்கு உண்டாகும் பொருட்செலவு எவ்வளவு? என்ற இந்தக்கணக்கையும் கொஞ்சம் கூட்டிப்பாருங்கள்! இப்பொருளில் நாட்டுக்கு ஒரு சிறு ஊசிநுனி யளவேனும் பயனுண்டா என்றும் எண்ணிப் பாருங்கள்!

இந்தக்கணக்கின்படி நமது இந்திய நாடு முழுவதிலும் உள்ள கோயில்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு பார்த்தால் நூறுகோடி ரூபாய்க்குக் குறையாமல் இவ்வாறு வீண் வழியில் செலவாகு மென்றே கூறலாம். நூறுகோடி ரூபாயாகவே வைத்துக்கொண்டு அதற்கு மாதம் நூற்றுக்கு, குறைந்த விகிதமாகிய 5 வட்டிபோட்டுக்கொண்டு ஒரு ஆண்டிற்கு மொத்த வட்டி எவ்வளவு ஆகிறது என்றுபாருங்கள்! இந்தவட்டித்தொகையை மட்டிலும செலவழித்து கல்விக்கழகங்களோ, தொழிற்சாலைகளோ, ஏழைமக்களின் பொருட்டு உண்டாக்கினால் நமது நாடு வெகு விரைவில் சமநிலைமையடையுமா? அடையாதா? என்ற கேள்விகளையும் ஆராய்ந்து பாருங்கள்!

மற்றொரு செய்தியையும் இவ்வமயம் நினைபூட்டுகிறோம். இத்தனை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் இந்தக்கோயில்களை யெல்லாம் கட்டிக் கொண்டு அழுதோமே ஏழைமக்களும் இவைகளை நம்பி வழிபாடாற்றி வந்தனரே! நமது நாட்டிலிருந்த பழய இந்துமத மன்னர்களெல்லாம் இந்தக்கோயில் களைப் புரந்து வந்தார்களே! இவைகளுக்குக்காணிகளும், காணிக்கைகளும் அளவில்லாமல் அளித்து வந்தார்களே! இவைகளால் நமக்கோ, நமது நாட்டுக்கோ, நமது நாட்டுப் பழயமன்னர்களுக்கோ கிடைத்த பயன்யாது? என்று தான் கேட்கின்றோம். நமது அறிவு வரவர அடிமையாயிற்று நாம் அன்னிய நாட்டினரால் "கூலிகள்" என இழிவுபடுத்தப்படுகிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே அரசுரிமை இழந்து அடிமைப்படுகுழியில் தள்ளுண்டுகிடக்கின்றோம். நமது நாடு அடிமை நாடு என்று பிறரால் எள்ளி நகைப்பிடத்தக்க நிலையில் இருக்கிறது. நமது நாட்டுப் பழய மன்னர்கள் பெயர் சொல்வதற்கும் சந்ததியில்லாமல் மறைந்தது; என்று நாம் கூறுவதை யார் மறுக்கமுடியும்?

உண்மையிலேயே, நமது நாட்டுக் கோயில்களும், அவைகளில் வதிவதாகக்கருதப்படும் தெய்வங்களும், பெருமை பொருந்தியனவாக இருந்தால், உயிருள்ளவையாக இருந்தால், வல்லமையுள்ளவையாக இருந்தால் என் நாம் தற்போதுள்ள எழ்மை நிலையில் இருக்க வேண்டும். நமதுநாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதுபேர் ஏழைகளாகவும், அடிமைகளாகவும், கல்வியறிவற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்று கேட்கிறோம். இக்கேள்வியையும் உங்கள் மனதில் பதித்து எண்ணிப் பாருங்கள்! உண்மை தோன்றாமற் போகாது.

அன்றியும், நமது நாட்டில் கோயில்களின் பெயராலும், திருவிழாக்களின் பெயராலும், பொதுப் பொருள்களும், மக்களுடைய செல்வங்களும் செலவாகின்றது போல வேறு எந்த நாட்டிலேனும் செலவாகின்றதா? என்று வரலாற்று நூல் வல்லவர்களைக் கேட்டுப்பாருங்கள்! மதத்தின் பெயரால், மற்ற நாடுகளிலும், இந்து மதத்தினரைத் தவிர மற்ற மதத்தினர்களிடையிலும் செலவாகும் பொருள்கள் எந்தவகையில் செலவாகின்றன? அந்தப்பொருள்களால், அந்த மக்கள் நன்மையடைகின்றார்களா? இல்லையா? அல்லது நம்மைப் போலவே அவர்களும், ஒன்றுக்கும் உதவாத வீண்வழிகளில் பாழாகச் செலவு செய்கிறார்களா? என்ற செய்திகளையும் கொஞ்சம் கேட்டுப்பாருங்கள்.

நாமறிந்தவரையிலும், மற்ற நாட்டினரும், மற்ற மதத்தினரும், மதத்தின் பெயரால் செலவாகும் பொருள்களை ஏழைமக்களின் கல்விக்காகவும், அவர்களின் உடல் நலத்திற்காகவும், பொதுமக்களுக்கு மருத்துவ உதவியளிக்கும் வகைக்காகவும் செலவு செய்வதாகவே அறிகின்றோம். ஏன் நமது கோயிலின் செல்வங்களை இந்த வகையில் செலவழிக்கக்கூடாது? இந்த வழியில் செலவு செய்தால் நமது "சாமிகள்" சினங்கொள்ளுமா? அல்லது குடியோடிப்போகுமா? அப்படி போனால் தான் போகட்டுமே! அதனால் யாருக்கென்ன தீமை விளைந்து விடப்போகின்றது?

இனி மடங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகள் செல்வததைக் கணக்கிட்டுப்பாருங்கள்! பெண்டு பிள்ளையற்ற துறவிகள் கோலம் புனைந்த ஒருவருக்கு ஏன் கோடிக்கணக்கான பொருள்? அந்தப்பொருளைக்கொண்டு அந்தத் துறவிக் கோலம் பூண்டவர்கள் மக்களுக்கு ஏதாவது கடுகளவாவது நலம்புரிகின்றார்களா? நலம் புரிய வேணடும் என்ற கருத்தாவது உண்டா? என்று எண்ணிப்பாருங்கள்.

அந்த வேடக்காரர்கள், செய்யும் அடாச்செயல்களுக்கு அளவுண்டோ? அவர்கள் தமது வருவாய்களை குடிக்கும், கூத்திக்கும் செலவிடுவதைத் தவிர வேறு என்ன செய்கிறார்கள்? துறவிகளாக இருக்கின்ற இவர்களுக்கு, அரண்மனையைப் போன்ற பெரிய பெரிய மடங்களேன்? இலட்சக்கணக்கான பெறுமானமுள்ள வயிரமோதிரங்களேன்? மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்புலன்களையும் அடக்கியாள வேணடியவர்களுக்கு, பஞ்சணைமெத்தைகளும், திண்டுதலையணைகளும், தங்க

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க,

# சிரார்த்தமும், கல்யாணமும்.

(ஸ்க்குரூஉ லூஸ்)

ஐயா! இன்று உங்களைச் சில கேள்விகள் கேட்கின்றேன். தயவு செய்து அந்தக் கேள்விகளை காதால் வாங்கிக்கொள்ளுங்கள்! மனத்தில் அழுத்தமாகப் பதிய வைத்துக்கொள்ளுங்கள்! அவைகளுக்குப் பதிலையோசித்துப்பாருங்கள்! பிறகு சுயமரியாதைக்காரர்களுடன் சண்டைக்கு வாருங்கள்! நாங்களும் நின்று பார்க்கின்றோம். நீங்களும் நின்று பாருங்கள்!

1. இறந்தவர்களின் பொருட்டு சிரார்த்தம் செய்வதில் அர்த்தமில்லை. அது பார்ப்பனர்களின் வயிற்றுப்பிழைப்புக்காக ஏற்பட்டது என்று சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாள் முதல் சொல்லிவருகிறது. ஆனால் நீங்கள் இன்னும் சிரார்த்தம் செய்துகொண்டுதான் இருக்கிறீர்கள்! சிரார்த்தத்தில் நம்பிக்கையுடைய இந்துக்களைக் கேட்கின்றேன்,

சிரார்த்தம் பண்ணினால்தான் மூதாதைகள் நல்ல கதியடைவார்கள் என்பது ஐதிகம். இந்த ஐதிகத்தைக்கொண்டுதான் சிரார்த்தம் செய்து வருகிறீர்கள்! உங்களுக்கு நீங்கள் அனுஷ்டித்துவரும் இந்து மதம் தெரியுமா? அதில் என்ன சொல்லுகிறது? "ஒரு மனிதன் இறந்தால், உடனே அவன் செய்த நல்வினை தீவினைக்குத் தகுந்தபடி உயர்ந்த பிறப்பையோ தாழ்ந்த பிறப்பையோ அடைகிறான்" என்று இந்துமதம் சொல்லுகிறது. இது உண்மையாக இருக்குமானால் நீங்கள் கொடுக்கும் சிரார்த்தம் அவர்களைச் சேருவது எப்படி?

இறந்த உயிர் அவை செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப சுவர்க்கத்தையடையும்! அல்லது மோட்சத்தையடையும்! அல்லது நரகத்தையடையும்! என்பவையும் இந்து மதக்கொள்கையாயிற்றே. பிதிர் லோகமென்று ஒன்று எப்படியிருக்க முடியும்?

இங்குள்ள ஒரு அழுக்குப்பிடித்த பார்ப்பானுக்குக் காய் கறிகளையும் அரிசி, பருப்பு, உப்பு, மிளகாய், புளிகளையும் அள்ளிக் கொடுத்தால் அது எப்படி உங்கள் பிதுர்க்களிடம் போய்ச்சேரும்?

இந்தப் புரோகிதனுக்கு அவ்வளவு சக்தியிருந்தால் இவன்நமது கண்முன்னேயே நாம் கொடுக்கும் சாமான்களைப் பிதிர் உலகத்துக்கு அனுப்பட்டுமே பார்ப்போம். பார்ப்பான் தனது மந்திர சக்தியினால் அவைகளை அனுப்புகிறான் என்று நம்புவீர்களாயின் ஒரு காரியம் செய்யச்சொல்லுங்கள். உயிரோடு இருக்கின்ற ஒருவனுக்குச் சாப்பாடு போடாமல் பட்டினியாக வைத்துவிட்டு, அவனுக்குப் பதிலாக ஒரு புரோகிதப் பார்ப்பானுக்கு மூன்றுவேளையும் சாப்பாடு போட்டு மந்திரம் செய்யச் சொல்லி பசியோடிருக்கின்றவன் பசியைத் தணிக்கச் சொல்லுங்கள்! இம்மாதிரி செய்வானானால் அவன் நமது மூதாதைகளின் பசியையும் தணிப்பான் என்று நம்புவோம். மேலே காட்டிய நமது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி விட்டுப் பிறகு நீங்கள் சிரார்த்தம் பண்ணுங்கள்.

2. அடுத்தபடி கல்யாணம் செய்வதைப்பற்றிச் சில கேள்விகள் கேட்கின்றேன்.

கல்யாணம் என்பது ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதற்குச் செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தம் என்று நாங்கள் சொல்லுகிறோம். நீங்கள் அது தெய்வீக சம்பந்தமானதென்று சொல்லுகிறீர்கள்! ஆகையால் ஆணுக்கும், பெண்ணுக்கும் சோதிடனைக்கொண்டு பொருத்தம் பார்க்கிறீர்கள்! புரோகிதனை வைத்து, நெருப்பு வளர்த்து, மந்திரங்கள் ஓதி, தாலி கட்டிக் கல்யாணம் செய்கிறீர்கள்! இதில் சில கேள்விகள் கேட்கின்றேன் பதில் சொல்லுங்கள்!

பெண்ணுக்கும், பிள்ளைக்கும் சோதிடனைக் கொண்டு பொருத்தம் பார்த்துக் கல்யாணம் பண்ணுகிறீர்களே! அந்தப் பெண் இறந்து மாப்பிள்ளை விதவன் ஆகவில்லையா? மாப்பிள்ளை இறந்து பெண் விதவையாக வில்லையா, பெண்ணை மாப்பிள்ளை விரட்டி விட்டு வேறு கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லையா? பெண்ணே மாப்பிள்ளையை விட்டு விட்டு ஓடிப்போவது இல்லையா? அல்லது இருவரும் ஆயுள் முழுவதும் ஒற்றுமையில்லாமல்சண்டை போட்டுக் கொண்டிருப்பதில்லையா? அல்லது இருவரும் பிள்ளையில்லாமலிருப்பதில்லையா? இந்தக்காரியம் எல்லாம் நடைபெறாதபடி ஏன் முதலிலேயே சோதிடம் பார்த்திருக்கக்கூடாது?

மகமதியர்களும், கிறிஸ்தவர்களும்,சோதிடம் பார்க்காமல்,பொருத்தம் பார்க்காமல் கல்யாணம் செய்கிறார்களே அவர்களுக்குள் இவ்வளவுமோசம்இருப்பதில்லையே. இந்துக்களின் குடும்பஙகளைக்காட்டிலும் அவர்கள் குடும்பங்கள் எவ்வளவோ சந்தோஷமாக வாழ்கின்றனவே. இதற்கென்ன சொல்லுகின்றீர்கள்!

நாம் புரோகிதர்களை வைத்தும், அக்கினியை வளர்த்தும் ஆயிரக் கணக்காகச் செலவு செய்தும் நடத்துகின்ற கல்யாணமும் மேற்கூறியவாறு மோசமாகத்தானே போகின்றது? ஒரு பைசாகூட செலவில்லாமல், ரிஜிஸ்தர் ஆபீசுக்குச் சென்று நாங்கள் இருவரும் கணவன் மனைவிகளாகிவிட்டோம் என்று பதிய வைத்துக்கொள்ளும் மேல் நாட்டினர் எவ்வளவோ சௌக்கியமாக வாழ்கிறார்களே! இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

நாம் அர்த்தமற்ற சடங்குகளைச்செய்வதனால் அதிகச்செலவு உண்டாகின்றது; முட்டாள்தனம் வளர்கின்றது; இவைகள் தான் கண்டபலன்; என்று நாங்கள்சொல்லுவதை எப்படி இல்லையென்று சொல்லுவீர்கள்! இவைகளுக்கெல்லாம் பதில் கூறிவிட்டுப் பிறகு நீங்கள் பார்ப்பானை வைத்துக்கல்யாணம் பண்ணுங்கள்! அதைப்பற்றி நமக்குக்கவலையில்லை.

மேற்கூறிய சிரார்த்தம், கல்யாணம் போன்ற சடங்குகள் எல்லாம் பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்பட்டன. இந்தச் சூழ்ச்சியை அறியாமல் பார்ப்பனரல்லாதார் இவைகளின் மூலம் தங்கள் செல்வங்களைச் செலவு செய்து ஏழையாகின்றனர். ஆகையால் வீண் செலவு செய்யவேண்டாம். சிரார்த்தத்தை நிறுத்துங்கள். கலயாணத்தைப்பெண் மாப்பிள்ளையின் சம்மதம் அறிந்த பிறகு, நாலு பேரை வைத்துக் கொண்டு மோதிரமோ, மாலையோ மாற்றிக்கொண்டு செலவில்லாமல் கல்யாணம் பண்ணுங்கள். அதனால் ஒன்றும் கெடுதிநேர்ந்துவிடாது என்றுதான் சொல்லுகிறோம்.

---

# மந்திரியின் மீது நம்பிக்கை.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் 16-8-32-ந்தேதி பகல் 1-மணிக்குக் கூடிற்று. வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் சுமார் 59 அங்கத்தினர்கள் வரை ஆஜராயிருந்தனர். ஜஸ்டிஸ் கட்சியின் பிரபலஸ்தர்களும் மந்திரிகளும் விஜயம் செய்தனர் கமிட்டித்தலைவர் திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார் ஏற்கனவே அறிவித்துள்ளபடி திரு, டி. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் மந்திரியின்மீது நம்பிக்கைஇல்லை என கொண்டுவரவிருந்த தீர்மானத்தையொட்டி பலத்த விவாதம் நடைபெறுமென பலர் எதிர்பார்த்தனர் அதற்கு மாறாக கூட்டம் அரைமணி நேரம் கழித்து மீண்டும் கூடியபோது திரு. டி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மந்திரியின்மீது நம்பிக்கையில்லையெனக்கொண்டு வந்த தீர்மானத்தை வாப்பஸ் வாங்கிக்கொள்வதாகவும் கட்சியின் பிரபல அங்கத்தினர்கள் கட்சியின் பிளவேற்படாமலிருக்கும்படி செய்ய வாப்பீஸ் பெற்றுக்கொள்வதாகவும் கூறினர். பின்னர் ஷை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கரகோஷத்தினிடையே வாப்பீஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

---

## ஈரோடு முனிசிபாலிட்டி விளம்பரம்.

முனிசிபல் வண்டிப்பேட்டையை (மறு ஏலதேதி முதல்) 31—3—35 முடிய அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதையை 10—9—32 தேதி காலை 9 மணிக்கு முனிசிபல் சங்கத்தாரால் பகிரங்கமாக மறு ஏலம் போடப்படும். நிபந்தனைகளை ஆபீசில் நோட்டீஸ் போர்டில் பார்த்துக் கொள்ளலாம்.

(ஒப்பம்) கே. ஏ. ஷேக்தாவுத்
சேர்மன்.

# வகுப்புப்பிரச்சினை முடிவு.

## தாழ்த்தப்பட்டாருக்கு இரட்டைத்தொகுதிகள்.

### பெண்களுக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்.

### சென்னை சட்டசபைக்கு 215 ஸ்தானங்கள்.

## இந்திய மந்திரி விளக்கம்.

**தனித்தொகுதி.**

முஸ்லீம்கள், சீக்கியர், இந்திய கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர், வெள்ளையர் இவர்களுக்குத் தனித்தனியே, வெவ்வேறு வாக்காளர் தொகுதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**தாழ்த்தப்பட்டார்.**

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஓட்டர்கள் பொதுத் தொகுதிகளில் ஓட் செய்யலாம். ஆனால் அவ்வகுப்பினருக்கென தனியே சில தொகுதிகளை சிருஷ்டி செய்வர். இவ்வித விசேஷ தொகுதிகள் 20 வருஷ காலத்திற்கு நீடித்திருக்கும். ஆனால் அவ் வகுப்பினர் விரும்பினால், அக்காலத்திற்குள்ளாகவே அவ்வித ஸ்பெஷல் தொகுதிகளை ரத்து செய்து கொள்ளலாம்.

**பெண்கள்.**

பெண்களுக்கு, வகுப்பு வாரியான ஸ்பெஷல் தனித்தொகுதிகளை ஏற்படுத்தியுள்ளனர். முஸ்லீம், ஹிந்து, கிறிஸ்தவப் பெண்கள் தனி வகுப்புத் தொகுதிகள் மூலம் மண்டல சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப் பெறுவர்.

**பாஞ்சாலம், வங்காளம்.**

பாஞ்சால சட்டசபையின் 175 ஸ்தானங்களுள் ஹிந்துக்களுக்கு 43, சீக்கியருக்கு 32, முஸ்லீம் களுக்கு (ஜமீந்தார் ஸ்தானங்கள் மூன்று உள்ளிட்டு) 89 ஸ்தானங்களும் அளித்திருக்கிறார்கள்.

வங்காள சட்டசபையின் 250 ஸ்தானங்களுள் ஹிந்துக்களுக்கு 80, முஸ்லிம்களுக்கு 119, வெள்ளையர்களுக்கு 25 ஸ்தானங்களும் ஒதுக்கிவைத்திருக்கிறார்கள்.

இதர மாகாணங்களில் முஸ்லீம்கள் தற்போது பெற்றுவரும் விசேஷப்பிரதிநிதித்துவத்தை இனியும் பெற்றுவருவர்.

தொழிலாளர்களுக்கு வகுப்பு பேதமற்ற தனித்தொகுதிகளை ஏற்படுத்துவர்.

இந்திய சட்டசபை பிரதிநிதித்துவத்தைப்பற்றி எவ்வித முடிவும் கூறவில்லை. ஆனால் அச்சபையின் அமைப்பை நிர்ணயிக்கும் போது, பல வகுப்புகளின் கோரிக்கைகளையும் பிரிட்டிஷ் சர்க்கார் பெரிதும் கவனிப்பரென உறுதி கூறியுள்ளனர்.

---

புதியஅரசியலில் ஸ்தாபிக்கச் வேண்டி வகுப்புப்பிரச்சினையைப்பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் செய்துள்ள முடிவை இரண்டுநாடுகளிலும் ஒரே சமயத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றி பிரதம மந்திரி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.—

"நான் பிரதம மந்திரி என்னும் ஹோதாவில் மட்டு மல்லாமல் இந்தியாவின் நண்பனாகவும் கடந்த இரண்டு வருடகாலமாக சிறுபான்மையோரின் விஷயத்தைப் பற்றி ஊக்கமெடுத்துக் கொண்டேன். ஆதலால் அரசாங்கம் இன்றையதினம் வெளியிடும் வகுப்புப் பிரச்சினை முடிவைப்பற்றி சிலவார்த்தைகளை க்கூறவிரும்புகிறேன்.

**நாங்கள் வகுப்பு பிரச்சினையில் தலையிட விரும்பவில்லை.**

இந்திய வகுப்பு வாதத்தில் தலையிட நங்கள் எப்பொழுதும் விரும்பியது கிடையாது. வட்டமேஜை மகாநாட்டு இரண்டு கூட்டங்களிலும் வகுப்பு வாதத்தைப்பற்றி இந்தியர்களே முடிவு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினோம். முதலிலிருந்தே நாங்கள் செய்யும் முடிவு ஒவ்வொரு சமூகத்தினராலும் நிராகரிக்கப்படுமெனத் தெரிந்துக் கொண்டோம். ஏனெனில் ஒவ்வொரு சமூகமும் அதிக சலுகை காட்டப்பட வேண்டுமென்று விரும்புகிறது. கடைசியாக எல்லா சமூகத்தாரின் பிரச்சினைகளும் ஒருவித அரசியல் ஸ்தாபனத்திற்கு ஒத்துழைக்குமென நாங்கள் நம்பினோம்.

**சமூக பிரச்சினையில் இந்தியர்கள் தோல்வி.**

நாங்கள் பகிரங்கமாகவே எங்களுடைய கடமைகளைச் செய்தோம். சமூகங்கள் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்காமல் தங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்தும் முறையில் தோல்வி யுற்றதால் அரசாங்கத்தாரே அதற்கு முடிவு கூற நேரிட்டது. ஆதலால் நான் வட்டமேஜை மகாநாட்டில் அரசாங்கத்தின் சார்பாக இந்திய பிரதிநிதிகள் வேண்டுகோளுக்கிணங்கி வாக்குறுதி கொடுத்ததைப்போல ஒரு முடிவு செய்து இன்று பிரசுரிக்கப்பட்டது. மாகாண சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் வழங்கும் முறை வெளியிடப்பட்டுள்ளது. இம்முடிவு கூடிய சீக்கிரத்தில் பார்லிமெண்டின் முன்பு சமர்ப்பிக்கப்படும். இதற்குள் எல்லா சமூகங்களும் ஒற்றுமைப்பட்டு ஒருமுடிவுக்கு வந்தால் அரசாங்கம் செய்திருக்கும் முடிவை பார்லிமெண்டின் முன்பு சமர்ப்பிக்கமாட்டார்கள். சமூகங்கள் ஒரு முடிவிற்கு வராவிடில் தீர்மானம் பார்லிமெண்டின் முன் சமர்ப்பிக்கப்படும்.

இத்தீர்மானம் சட்டமாகு முன்பு சமூகங்கள் ஒரு முடிவிற்கு வந்தால் நாங்கள் பெரிதும் சந்தோஷ மடைவோம். ஆனால் அனுவபத்தின்றும் இதற்குமேல் ஒரு தீர்மானத்தை செய்யமுடியாதென அரசாங்கம் நம்புகிறது. ஆனால் எல்லா சமூகங்களும் கட்சிகளும் ஒத்துக்கொள்ளும்படியான ஒரு முடிவு இந்தியர்களுக்குள்ளேயே செய்து கொள்வார்களாகில்கவர்னருக்குட்பட்ட மகாணங்களில் அதை அரசாங்க தீர்மானத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

**நியாயமான முறையில் செய்யப் பட்டுள்ளது.**

அரசாங்கத்தாருடைய முடிவின் நியாயமான முறையைத்தெரிந்து கொள்ள வேண்டுமாகில் எத்தகைய கட்டு திட்டங்களின் பேரில் இத்தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறதென்பதை கவனிக்க வேண்டும். பலவருடங்களாக சிறுபான்மை வகுப்பினர்கள் தங்களுடைய சமூகத்தின் பாதுகாப்பிற்காக 'தனித் தொகுதியே வேண்டுமென்று அவாக்கொண்டிருந்தனர். புதிய அரசியல் நிர்மாணத்திலும் தனித்தொகுதி முறையையே கைக்கொண்டு தீர்மானிக்கப் பட்டுள்ளது. சிறுபான்மை வகுப்பார் அவர்களுக்கு பாதுகாப்பில்லாத கலப்புத்தொகுதி முறையைக் கையாளுவது முடியாத காரியமென்று அரசாங்கம் தெரிந்து கொண்டதால் தனித்தொகுதிமுறையைக் கையாண்டது. கடந்த சிலகாலமாக நடந்த நிகழ்ச்சிகளை இதற்காக குறிப்பிடுவது அனாவசியமாகும். பெரும்பான்மைச் சமூகத்தாரும், சிறுபான்மைச் சமூகத்தாரும் சமாதானத்துடன் வேலைசெய்ய வேண்டுமென்றும் இன்னும் அதிகப்படியான பாதுகாப்பளிக்க வேண்டுமென்னும் கோரிக்கை எழாமலிருக்க வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

இன்னும் இரண்டு விஷயங்களைப்பற்றி நான் கூறவேண்டியிருக்கிறது. ஒன்று தாழ்த்தப்பட்டோரின் விஷயமாகும், மற்றொன்று மாதர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதைப் பற்றிய விஷயமாகும். இதைப்பற்றி அரசாங்கத்தார் ஒருவித முடிவிற்கு வரக்கூடாமலிருப்பதால் அதை விட்டு விட்டது.

**தாழ்த்தப்பட்டோருக்கு ஸ்தானங்கள்.**

தாழ்த்தப்பட்டோர்கள் அதிகப்படியாகயிருக்கும் மாகாணங்களிலுள்ள சட்டசபைகளில் அவர்களுக்கிஷ்டமானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமென்றும் ஆனால் அதன்படி பிரிந்திருத்தலை நிலைநிறுத்தாது ஒழித்துவிட வேண்டுகிறோம். ஆதலால் தாழ்த்தப்பட்டோர்கள் இந்துக்களுடனேயே பொதுவாக ஓட்டுக்கொடுப்பதால் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதி செல்வாக்கடைந்து பொறுப்பை ஏற்பார். 20 வருடகாலம் வரையிலும் தாழ்த்தப்பட்டோருக்கென்று தனிப்பட்ட ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படும். தாழ்த்தப்பட்டோருக்காக சில ஸ்தானங்கள் கொடுக்கப் படுவதால் அவர்கள் கோரிக்கைகளைத் தெரியப்படுத்தி தங்களுடைய நிலைமையை விருத்தி செய்து கொள்ளலாம்.

மாதர்களைப்பற்றி எடுத்துக்கொள்வோமாகில்,கடந்தவருடங்களில் நடந்த இயக்கத்தினின்றும் மாதர்களே இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் திறவு கோலைப்போலயிருக்கிறார்களென்பது தெரிய வருகிறது. மாதர்கள் செல்வாக்குடையவர்களாக ஆகும்வரையில் உலகிலுள்ள மற்ற நாடுகளைப் போல இந்தியாவும் முன்னணிக்கு வர முடியாதெனக் கூறுவது மிகையாகாது. மாதர்களுக்குத்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

குடி அரசு.

ஈரோடு 1932 ஆகஸ்டுமீ 21-உ

# இதற்கு என்ன சொல்லுகிறார்கள்?

—:0:—

மக்களுக்குள் எந்தவகையிலும் வித்தியாசங்கள் என்பனசிறிதும் இல்லை. ஆனால் தற்போது காணப்படும் வித்தியாசங்களை ஏற்படுத்தி ஒரு கூட்டத்தாரை உயர்வாகவும், மற்றொரு கூட்டத்தாரைத் தாழ்வாகவும், மற்றுஞ்சில கூட்டத்தாரை நடுத்தரமானவர்களாகவும் மற்றும் பலரைத் தாழ்த்தப்பட்டவர்களாகவும், மற்றும் பலரைத் தீண்டாதார்களாகவும் பிரித்துப் பிரித்து வேறு வேறாக வைத்திருப்பது சுய நலங்கொண்ட மக்களால் செய்யப்பட்ட ஏமாற்றேயன்றி வேறல்ல; உண்மையில் நோக்கும் போது எல்லா மனிதர்களும், சமமான நிலையையும், இன்பத்தையும், வாழ்வையும் பெறுவதற்குத் தகுதியுடையவர்களே யாவார்கள்; ஆகையால் மக்களுக்குள் உள்ள உயர்வு தாழ்வு, வேற்றுமைகளை ஒழித்து எல்லோரையும் ஒன்றுபடுத்திச் சுதந்தரமும், சுகமும் உடையவர்களாய் வாழச்செய்ய வேண்டும்; என்னும் எண்ணம் தற்கால அறிஞர்கள் மனத்தில் தோன்றி அதற்கான முயற்சிகள் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுகின்றன.

மக்களுக்குள் அளவிலடங்காத வேற்றுமைகளும், இவ்வேற்றுமைகாரணமாக ஒருவர் மேல் ஒருவர் வீண் வெறுப்புக்கொள்ளுதலும், இவ்வெறுப்புக்காரணமாகக் கொடுமைகளைச் செய்வதுமாகிய காரியங்கள் மற்றய நாடுகளைக்காட்டிலும், நமது நாட்டில், நமது சமூகத்தில் நாள் தோறும் அதிகமாக வளர்ந்து கொண்டே போகின்றன என்பதைப் பகுத்தறிவுடையவர்கள் எல்லோரும் அறிவார்கள். இவைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பன பலவாயினும் முக்கியமானது மதம் ஒன்றே என்று நாம் கூறிவருகிறோம். ஆகவே மதம் என்பது அடியோடு அழிந்தால் மக்களிடம் உள்ள வேற்றுமைகளும், வெறுப்புக்களும், நீங்கி ஒற்றுமையுண்டாகி விடும் என்றும் கூறிவருகிறோம்.

அதிலும் முக்கியமாக இந்து மதம் அழிந்தால் தான் இந்துக்கள் உருப்பட முடியும் என்பதை முக்கியமாக எடுத்துக்காட்டிவருகிறோம். இவ்விஷயத்தை நாம் சொல்லும் போது தான் நம்மை "இந்துமதத் துரோகி"கள் என்றும், "தேசத்துரோகி"கள் என்றும், "நாஸ்திகர்"கள் என்றும் நம்மைப்பற்றி நம் எதிரிகள் பொது ஜனங்களிடையில் துவேஷப் பிரசாரம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். எதற்காக நாம் இந்து மதம் முதலில் அழிந்து தீரவேண்டும், அல்லது அழிக்கப்பட்டுஒழியவேண்டும் என்று சொல்லுகின்றோம் என்பதை அறிந்தார்களானால் நம்மைப் பகுத்தறிவுடையவர்கள் அவசரப்பட்டு ஒதுக்கிவிட மாட்டார்கள்; அல்லது நம்மோடு அவசரப்பட்டுச் சண்டைக்கு வரமாட்டார்கள் என்பது நிச்சயமாகும். ஆகையால் அக்காரணத்தைச் சிறிது கூற விரும்புகிறோம்.

சாதி வித்தியாசம் "கடவுள்" என்பவராலேயே ஏற்படுத்தப்பட்டது என்பது இந்துமதக் கொள்கை. "வேதங்கள்" என்பவைகளிலும், "ஸ்மிருதிகள்" என்பவைகளிலும், "கடவுள்" என்பவரின் முகத்தில் இருந்து "பிராமணன்" என்னும் சாதியும், தோளிலிருந்து "க்ஷத்திரியன்" என்னும் சாதியும், துடையிலிருந்து "வைசியன்" என்னும் சாதியும், பாதத்திலிருந்து "சூத்திரன்"என்னும் சாதியும் பிறந்ததாகக் கூறுகின்றன. இந்த சாதி வேற்றுமையை ஆதாரமாகக்கொண்டே உயர்வு தாழ்வுகளும், தொழில்களும் கற்பிக்கப்பட்டன. ஆதியில் ஏற்படுத்தப்பட்ட இந்நாலு வகையான சாதி வேற்றுமையே இப்பொழுது நாலாயிரக்கணக்கான சாதி வேற்றுமைகள் தோன்றி நிலைத்திருப்பதற்குக் காரணமாக இருந்தன.

அன்றியும் மக்கள் சமூகத்தில் பாதித்தொகையாக இருக்கின்ற பெண்கள் சமூகத்தைக் கொடுமைப்படுத்தி, அடிமைப்படுத்தி அவர்கள் ஒன்றுமறியாத அபலைகளாக வைத்திருப்பதற்குக் காரணமும் இந்து மதமேயாகும்.

இன்னும் எண்ணற்ற பண்டிகைகளையும், திருவிழாக்களையும் ஏற்படுத்தி ஏழை மக்களின் பொருளை வீணாகச் செலவழிப்பதற்குக்காரணமாயிருப்பதும் இந்துமதமேயாகும்.

கல்யாணத்திலும், கருமாதியிலும், இன்னும் பல காரியங்களிலும் பல வகையான அர்த்தமற்ற சடங்குகளை ஏற்படுத்தி, இவ்வைகள் மூலம் ஏழை மக்களின் பொருளைப் பார்ப்பனர்களுக்குப் போய்ச் சேரும்படி செய்வதற்குக்காரணம் இந்துமதமேயாகும்.

காளியென்றும், கருப்பன் என்றும், முனியாண்டி என்றும், சிவன் என்றும், பெருமாள் என்றும், பலவகையான சாமிகளையும், அவைகளுக்கு விக்கிரகங்களையும், அவ்விக்கிரகங்களுக்குக் கோயில்களையும் ஏராளமான பொருளைச் செலவு செய்து கட்டி வைத்து, அவைகளின் பேரால் நாள் தோறும், வாரந்தோறும், வருஷந்தோறும், ஆயிரக்கணக்காகவும், லட்சக்கணக்காகவும், கோடிக்கணக்காகவும் பணத்தை வீணாகச்செலவு செய்து விட்டு இந்திய நாடு வறுமையடைவதற்குக் காரணமாயிருப்பதும் இந்து மதமேயாகும்.

இவ்வாறு எந்த வகையில் பார்த்தாலும் இந்து மதமானது அதைப் பின்பற்றும் மக்களை நாள் தோறும், அடிமைகளாகவும், தரித்திரர்களாகவும், மூடர்களாகவும், ஒருவரோடு ஒருவர் ஒன்று சேரமுடியாதவர்களாகவும் செய்து கொண்டு வருகிறதே யொழிய மற்றபடி கடுகளவு நன்மையையாவது உண்டாக்கவில்லை என்பதை "மதம்" என்னும் பாசியினால் மறைக்கப்படாத மூளையை உடையவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

இந்து மதத்தினால் விளையும் இத்தகைய கெடுதிகளை நன்றாய் அறிந்தே காலஞ் சென்ற பெரியார்களாகிய இராமாநுஜர், சைதன்னியர், ராஜாராம் மோகனராய், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர் முதலியவர்கள் சாதி வேற்றுமையை ஒழிக்கவும், பெண்கள் அடிமையை அகற்றவும் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். அவர்கள் செய்த முயற்சிகள் அனைத்தும் இன்று ஏட்டளவிலும், பேச்சளவிலும் நிற்பதைத்தவிர ஒரு பலனையும் தரவில்லை என்பதை நாம் அறிந்துதான் இருக்கின்றோம். இவ்வாறு அவர்களுடைய முயற்சி பலன் தராமல் போனதற்குக் காரணம் பாழும் இந்து மதமே என்பதில் ஐயமில்லை. சாதி பேதம், பெண்ணடிமை ஆகிய அஸ்திவாரங்களின் மேல் கட்டப்பட்டிருக்கும் இந்து மதத்தை வைத்துக்கொண்டே அந்தச் சாதி பேதத்தையும், பெண்ணடிமையையும் ஒழிக்க வேண்டுமென்றால் எப்படி முடியும்? ஆகையால் நாம் இந்து மதமாகிய வீட்டையே முழுவதும் இடித்து எறிந்தால்தான் அதன் அஸ்திவாரமாகிய சாதி பேதம், பெண்ணடிமை ஆகிய இரண்டையும் அடியோடு பெயர்த்தெறிய முடியும் என்று கூறுகின்றோம். ஆகவே நமது நோக்கம் சாதி பேதமும், பெண்ணடிமையும் ஒழிய வேண்டுமென்பது தான் எனநாம் எடுத்துக்காட்டுவது மிகையாகும்.

ஆகையால் யார் யார், சாதிவேற்றுமைகளை ஒழித்துமக்களுக்குள் சமதர்மத்தை நிலை நிறுத்தவும், பெண்களுடைய அடிமைத் தன்மைக்கான காரணங்களை யெல்லாம் ஒழித்து அவர்களுக்கும் ஆண்களைப் போல் சம உரிமை அளிக்கவும் பாடுபடுகின்றார்களோ அவர்களை யெல்லாம் நாம் பாராட்டுகின்றோம். இத்தகைய கொள்கைகளுடன் உழைத்துவரும் இயக்கங்களுக்கும், மக்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் மதங்களுக்கும் கூட நாம் எதிரிகளல்லவென்பதைச் சொல்லிக்கொள்ளுகிறோம்.

நாம், இப்பொழுது இந்துக்களுக்குள்ளேயே, வடநாட்டிலும் தென்னாட்டிலும், சாதி வேற்றுமையையும், பெண்ணடிமையையும் ஒழிக்கவேண்டும் என்னும் கிளர்ச்சி தோன்றியிருப்பதைக் கண்டு நமது இயக்கத்தின் நோக்கமும், வேலையும் வீண் போகவில்லை யென்று களிப்படைகிறோம். இதற்கு உதாரணமாகச் சென்ற 8-8-32ல் புதிய டில்லியில் "இந்து சீர்திருத்த மகாநாடு" என்னும் பெயருடன் இந்துக்களால் ஒரு மகாநாடு நடத்தப்பட்டதையும், அம்மகாநாட்டின் தலைவர் வரவேற்புத்தலைவர் முதலியவர்களின் பேச்சுக்களையும், அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கூறலாம்.

அம்மகாநாட்டின் வரவேற்புத் தலைவர், திரு. ராமலால் வர்மா என்பவர் "மூடநம்பிக்கைகளாலும், இழிவான வைதீகங்களாலும், பலவிதமான சாதிபேதங்களும் பிரிவுகளும் ஏற்பட்டகாரணத்தால் இந்து சமூகம் தாழ்ந்த நிலையையடைந்து விட்டது. இந்து சமயம் தீண்டாமை என்னும் கறையினால் தாழ்வையடைந்திருக்கிறது. ஆகையால் இந்த சாதி வேற்றுமைகளையும், தீண்டாமையையும் அடியோடு ஒழிக்க வேண்டியது அவசியமாகும்" என்று பேசியிருக்கிறார்.

அம்மகாநாட்டின் தலைவர் சுவாமி சத்திய தேவபாரி பிரஜாத் என்பவர்,

"இந்துக்கள் வீண்பெருமையையும், துவேஷத்தையும் விடுவார்களானால் அவர்கள் ஆதிக்கம்

பிருந்தவர்களாவார்கள். இந்துக்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதற்கு முன் சுயராஜ்ஜியம் கிடைப்பதென்பது முயற்கொம்புதான். இந்தியாவின் மக்களாகிய இந்துக்கள் அனைவரும், தமக்குள் உள்ள சமூகத்துவேஷங்களை விட்டொழித்தும், சமூகக்கொடுமைகளை ஒழித்தும், சுயநலத்தை விட்டுக்கொடுத்தும் இந்தியாவுக்குத்தொண்டு புரியவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று பேசியிருக்கிறார்.

இன்னும் அம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மூன்று தீர்மானங்கள் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வேண்டிய சிறந்த தீர்மானங்களாகும், அவைகள் வருமாறு:—

1. இம்மகாநாடு இந்து சமூகத்தில் பிறப்பினாலேயே சாதி வேற்றுமை பாராட்டும் காரணத்தால் ஆயிரக்கணக்கான சமூக வேற்றுமைகளும், தீண்டாமையும் வளர்வதாகக்கருதுவதால் சாதிவித்தியாசம் பாராட்டுவதை இந்துக்கள் அதிவிரைவில் விட்டொழிக்கவேண்டுமென்றும், இதன்பொருட்டு இந்துக்களின் பல பிரிவான சாதியினரும் தங்களுக்குள் சமபந்தி போஜனமும், கலப்புமணமும் செய்யவேண்டுமென்றும் யோசனை கூறுகிறது.

2. இம்மகாநாடு தீண்டப்படாதவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும் பொது இடங்கள், பொதுக்கிணறுகள், பொதுப்பாதைகள் முதலியவற்றை மற்ற இந்துக்களைப்போல் சமஉரிமையோடு அனுபவிக்க உரிமையுண்டு என்று கருதுவதுடன், பொதுப்பள்ளிக்கூடங்களில் மேற்கண்ட வகுப்புப்பிள்ளைகளைத் தடையின்றிச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், இந்துக்கோயில்களிலும், மற்ற பொது இடங்களிலும் தடையின்றிச் செல்ல அனுமதிக்கவேண்டும் என்றும், கேட்டுக்கொள்ளுகிறது.

3. இம்மகாநாடு இளம் பருவத்தில் பெண்களுக்கு மணம் புரியும் காரணத்தாலேயே விதவைகள் பெருகுவதனால் இந்துக்கள் அனைவரும் இளம்பருவ மணத்தை ஒழித்துச் சாரதா சட்டத்தின்படி மணம் செய்யுமாறும், சமூக ஒற்றுமையுடன் அச்சட்டத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

மேற்கண்ட மூன்று தீர்மானங்களிற்கண்ட விஷயங்கள் நமது சுயமரியாதை இயக்கத்திற்குப் புறம்பானவையல்ல. அத்தீர்மான விஷயங்கள் இந்துக்களால் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படுமானால் நமது விருப்பத்தின்படி இந்துக்களின் சமூகம் வளர்ச்சியடைவதுடன், அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் இந்துமதமும் அழிந்துதான் தீரும்.

சாதி வித்தியாசமும், தீண்டாமையும், கோயில்களிலும், பள்ளிக்கூடங்களிலும், பொதுக்கிணறு, பொதுப்பாதைகளிலும் தாழ்த்தப்பட்டார்க்கு உரிமையில்லாதிருப்பதும், இளமை மணமும் இந்து மதத்திற்கு அடிப்படையானவைகள்; ஆகையால் இவைகள் காப்பாற்றப்படவேண்டும் என்று கும்பகோணம் பார்ப்பனர்கள் பேசிக்கொண்டு வருவதையும் மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருப்பதையும் அறிந்தவர்கள் டில்லி இந்து சீர்திருத்த மகாநாட்டுத் தீர்மானங்கள் இந்து மதத்திற்கு மாறுபட்டதென்பதையும் இந்து மதத்திற்கு அழிவைத்தேடுவது என்பதையும் ஒப்புக்கொள்ளாதிருக்க முடியுமா? என்றுதான் கேட்கின்றோம். ஆகவே இந்து மதத்திற்குப்புறம்பானதாயிருந்தாலும் இருக்கட்டும், இதனால் இந்து மதம் அழிந்தாலும் அழியட்டும் என்றதைரியத்துடன் இந்துசமூக வளர்ச்சி ஒன்றையே கருதி மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றிய டில்லி "இந்து சீர்திருத்த மகாநாட்டா"ரை நாம் பாராட்டுகிறோம். இச்சமயத்தில் சுயமரியாதை இயக்கத்தைக்கண்டுமுணுமுணுக்கும் பண்டிதர்களும், தென்னாட்டுக்கும்பகோணம் மடிசஞ்சிகளும், திரு. எம். கே. ஆச்சாரியார் கூட்டத்தாரும், வடநாட்டில் இந்துக்கள் கூடி இவ்வாறு தீர்மானம் பண்ணியிருக்கிறார்களே இதற்கு என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்கின்றோம்.

இதனால்தான் நமது இயக்கத்தின் ஆக்கவேலைகளாகக்கலப்பு மணங்களையும், விதவா விவாகங்களையும், சமபந்தி போஜனங்களையும், தீண்டாமை ஒழித்தலையும் செய்துவருகிறோம். இக்காரியங்களின் மூலம் சடங்குகளும், சாதிகளும்ஒழிக்கப்பட்டு வருகின்றன. இக்கொள்கை இந்தியா முழுவதும் அனுஷ்டிக்கப்படுமாயின் இந்துக்களைப்பிடித்த கஷ்டம் விரைவில் அழிந்து ஒழிவது நிச்சயமென்பதில் ஐயமில்லை.

இன்று சாதிகள் ஒழியவேண்டும், பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்கவேண்டும், இவைகளின் பொருட்டுக் கலப்பு மணங்கள் செய்யப்படவேண்டும், மூடநம்பிக்கைக்கான சடங்குகளை ஒழிக்க வேண்டும் என்னும் கொள்கைகளை பழுத்த இந்துமத பக்தர்கள் கூட ஒப்புக்கொண்டு பிரசாரம் பண்ண முன்வந்திருப்பதை நோக்கும்போது இன்னுஞ்சில நாட்களில் இவர்களே, இந்து மதத்தினர் வரவர தரித்திரதசையை அடைவதற்குக்காரணம் என்ன என்பதை ஆழ்ந்து சிந்திப்பார்களாயின் அதற்குக்காரணம் கோயில்களும், சாமிகளும், சடங்குகளும், பண்டிகைகளும் என்பதை யுணர்ந்து இவைகளையும் ஒழிக்க முன்வருவார்களென்றே நம்பலாம்.

ஆகையால் எப்பொழுதாவது இன்றில்லாவிட்டாலும் இன்னுஞ் சில தினங்கள் கழித்தாவது மக்களின் முன்னேற்றத்திற்குத்தடையாயிருக்கின்ற "இந்து மதம்" "வைதீகமதம்" "தெய்வீகமதம்" "புராதன மதம்" என்று சொல்லப்படுகின்ற பாழும் மதம் அழிந்தேதீரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆதலால் இனியாவது சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்ற விஷயங்களில் உண்மையை உணர்ந்து மக்களின் முன்னேற்றத்திற்கான முயற்சியைப் புரியுமாறு பொது ஜனங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்.

செல்வாக்கோ, வன்மையோ பெற்ற எந்தக்கட்சியேயாயினும் எந்த இயக்கமேயாயினும் அதிலுள்ள அங்கத்தினருள் அபிப்பிராய பேதங்கள் எழுவதும் இருப்பதும் சர்வசாதாரணம் உண்மையுணர்ந்து அத்தகைய அபிப்பிராயபேதங்கள் பரிகரிக்கப்பட்டால் பின்னர் ஆக்க வேலைகள் தீவிரமாய் நடைபெறுவதும் சரித்திர சம்மதமான யாரும் மறுக்க முடியாத உண்மைகளாகும். உலகெங்கும் இத்தகைய சம்பவங்கள் நடப்பதை கேட்டும், கண்டும் வருகிறோம். இத்தகைய சம்பவங்கள் கட்சியின் முன்னேற்றத்தையும் பலத்தையும் குறிக்கிறதேயன்றி வேறில்லை. பார்ப்பனரல்லாதார் கட்சி ஆதிக்கத்திலிருப்பதும் பார்ப்பனரல்லாத மந்திரி சபை அதிகாரத்திலிருப்பதும், இக்கட்சியை ஒழிக்க அதிகாரத்தைக் கைக்கொள்ள எதிரிகள் செய்யும் ஆட்சிகளும் விஷமங்களும் எண்ணிறந்தன். இதன் உண்மையறியாது நம்மக்கள் இன்னும் ஏமாந்தே வருகின்றனர். சிலதினங்களுக்குமுன் சென்னை அரசாங்க மந்திரி கனம் முனுசாமிநாயுடு அவர்கள் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வருவதாக இருந்த விஷயமே தக்க சான்றாகும். அதற்காகக்கூடிய தென் இந்திய நலஉரிமைச்சங்க நிர்வாகக்கமிட்டியின் கூட்ட நடவடிக்கைகளைப் பிறிதோரிடம்பிரசுரித்துள்ளோம். யாராயிருந்த போதிலும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லவும், குறையைத்தெரிவித்துக் கொள்ளவும் உரிமையுண்டு என்பதை நாம் ஒப்புக்கொண்ட போதிலும், இந்தியாவுக்கு வழங்கப்போகும் சீர்திருத்தங்கள் பிரஸ்தாபத்தில் இருக்கின்றன. கட்சி பலத்தை உத்தேசித்து ஏகோபித்த ஆக்க வேலையில் ஈடுபட வேண்டிய பொழுது இத்தகயதோர் சம்பவம் நடந்ததையறிய உண்மையில் வருந்துகிறோம்.

அஃதெவ்வாறாயினும் இத்தகயதோர் தீர்மானம் கொணர்ந்த அங்கத்தினரே முன்யோசனையுடனும், பகுத்தறிவுடனும் நடந்து அத்தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டதறிய சந்தோஷிக்கிறோம். பார்ப்பனரல்லாதார் கட்சி கட்டுக்குலைந்துபோக போகிறது என்று அகந்தையும் வீராப்பும் கொண்டிருந்த எதிரிகள் சூடுண்ட பூனை போலடங்கினரென்றே சொல்லுவோம். பார்ப்பனரல்லாதமக்கள் ஒருமைப்பட்டு ஆக்க வேலையில் முழுமனதுடன் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## வகுப்புப்பிரச்சினை முடிவு.

### ஆர். கே. சண்முகம் அபிப்பிராயம்

சமூகத்தகராறு சம்மந்தமாக முடிவு செய்யும் பொறுப்பை மூன்றாவது மனிதர்களிடம் விட்டது இந்தியாவிலுள்ள சமூகங்களுக்கு அவமானகரமாகுமென்பதே எனதபிப்பிராயம் ஓர் ஆதாரத்தைக்கொண்டும் சமூகத்தீர்ப்பையொட்டி முடிவான அபிப்பிராயம் கூறுவது முடியாத காரியம் இந்தியாவிலுள்ள சமூகத்தினர் இனிமேலாவது அவர்களுக்குள்ளேயே ஓர்சமரசம் செய்து கொள்வார்களென்பது எனது நம்பிக்கை.

### மரணம்.

சுயமரியாதை இயக்கத்தோழர் மாயவரம் சி. நடராஜன் அவர்கள் சகோதரி திருமதி குஞ்சம்மாள்நோய்வாய்ப் பட்டிருந்து 31-7-32ந் தேதியன்று இறந்துவிட்டார்கள். (ஒரு நிருபர்)

# பட்டுக்கோட்டை தாலூக்கா 1-வது சுயமரியாதை மகாநாடு.

பட்டுக்கோட்டை செட்டியார் வீதியில் அமைக்கப்படும் வைக்கம்வீரர் மஹால் என்னும் சிங்காரப்பந்தலில் ஆகஸ்டு-மீ 28, 29-உகளில் நடைபெறும்.

மகாநாட்டுத்தலைவர், தோழர்.
டி. வி. சுப்பிரமணியம்
ஆசிரியர் திராவிடன், சென்னை.

திறப்பாளர்
திருமதி. இந்திராணி, பாலசுப்பிரமணியம் அம்மையார் சென்னை.

கொடியேற்றுபவர்.
தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் பி. ஏ., பி. எல்.,

வரவேற்புக்கழகத்தலைவர்
தோழர். கே. வி. அழகர்சாமி அவர்கள்

திருமணம் நடத்துபவர்
பண்டிதர். திருஞானசம்பந்தர், சென்னை.

வரவேற்புக்கமிட்டியார்
டி. வி. டேவிஸ் பி. ஏ., என். விஸ்வநாதன்

காரியதரிசிகள்
ஆர். ஜெகநாதன், பி. ராஜகோபால்.

உதவிகாரியதரிசிகள்
ஆர். கண்ணையா, தொண்டர் படைத்தலைவர்.
பி. பழனிசாமி, விளம்பர அதிகாரி.
எஸ். கே. சிதம்பரம் அவர்கள் பொருளாளர்.

29-ந்தேதி மாலையில் பொதுஜன சங்கத்தின் ஆதரவில் பி. எஸ். தண்டபாணி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். கீழ்க்கண்ட தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்:— 1. இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மையார் சென்னை, 2. டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியர் திராவிடன், சென்னை, 3. கே. முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் சென்னை, 4. பண்டிதர் திருஞானசம்பந்தர் அவர்கள் சென்னை, 5. கே. வி. அழகர்சாமி அவர்கள் முதலியோர் "மக்கள் உரிமை" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

## நீலாம்பாள்-விஸ்வநாதம் திருமணம்.

பட்டுக்கோட்டை செட்டியார் வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் வைக்கம்வீரர் மஹால் என்னும் சிங்காரபந்தலில் ஆகஸ்டு-மீ 28-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்குமேல் இவ்வூர் சுயமரியாதை தொண்டர் என். விஸ்வநாதனுக்கும், நாகபட்டணம் திருமதி நீலாம்பாளுக்கும் சீர்திருத்தமுறையில், சென்னை பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர் திருஞானசம்பந்தர் தலைமையில் திருமணம்நடைபெறுவதால் சுயமரியாதை தொண்டர்களும், சுயமரியாதை இயக்கத்தில் ஆர்வமுள்ள தோழர்களும் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கே. வி. அழகர்சாமி,
சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புக்கழகத்தலைவர்.

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

"குடி அரசு" பத்திரிகை சென்னையில் விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய தகுந்த ஏஜண்ட் தேவை. இப்போது சென்னை நகரில் மட்டும் 150 காப்பிகள் செலவாகின்றன. விருப்பமுள்ளவர்கள் விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.

## வகுப்புப்பிரச்சினை முடிவு.

சர். கே. வி. ரெட்டி அபிப்பிராயம்.

வகுப்புப்பிரச்சினை முடிவு அநேகமாக எல்லோருக்கும், முக்கியமாக வங்காளம், சிந்து, பஞ்சாப், எல்லைப்புறமாகான வாசிகளுக்கும் திருப்தியளிக்க கூடியதாயிராது. வேறு வகையிலிருந்த போதிலும் மற்றசிலருக்கு அதிருப்தியளிக்க கூடியதாயிருக்கும் தவிரவும் இந்திய சமூகத்தினர் தங்களுக்குள் ஒரு ஒற்றுமை ஏற்படுத்திக்கொண்டு வேறு தகுந்த மாற்றங்களை உண்டாக்க முற்படுவார்களேயானால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தாங்கள் சமர்ப்பிக்கப்போகும் இந்திய சர்க்கார் திட்டத்தில் அதையும் சேர்த்துக்கொள்ள அநுமதித்திருக்கின்றனர். அத்தகயமுறை புதிய சீர்திருத்தத்திற்கு தடையேற்படுத்துவதல்லாமல் விபரீதமாய் முடிந்தாலும் முடியலாம். ஆனால் இன்னும் சில வருஷத்திய அநுபவங்களைக் கொண்டு இவைகளைத் திரித்தவோ, மாற்றவோ முயற்சிப்பதுபுத்திசாலித்தனமாகும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பார் பெற்றிருக்கும் உரிமை போற்றற்குறிய தாகும். அவர்களிலுள்ள இருகட்சியாரின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன இதுவரை தாழ்த்தப்பட்டமக்கள் அடைந்ததுன்பத்திற்கும், புறக்கணிக்கப் பட்டிருந்ததற்கும் சிறந்த பரிகாரமென்றே எண்ணுகிறேன்.

## மதனுகமம்
(புதுச்சேரிப் பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறுமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம்.
தர்மராஜா கோவில் வீதி,
புதுச்சேரி.

## திருப்பத்தூர்
சுயமரியாதைப் பிரசாரம்.

17—8—32ந்தேதி மாலை 3—45 மணிக்கு சென்னையிலிருந்து ஜஸ்டிஸ் ஆசிரியர் தோழர் டி. ஏ. வி. நாதன் அவர்களும், திராவிடன் ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவகளும் இவ்வூர் ரயில் நிலையத்தில் வந்திறங்கினார்கள். அவர்களை இவ்வூர் சுயமரியாதைச் சங்கத்தார்வரவேற்றார்கள். முன்னர் அறிவித்திருந்தபடி மாலை 5-30மணிக்கு டவுன் மார்க்கட்டில் (காந்தி சவுக்கில்) ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு உள்ளூர், வெளியூர் பிரமுகர்கள் சுமார் 2000 பேர்களுக்குமேல் வந்திருந்தனர். கூட்டத்திற்கு தோழர் வக்கீல் பெரியசாமிபிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். இரண்டு தோழர்களால் சுயமரியாதைப் பாடல்கள் பாடப்பட்டன. தோழர்களான டி.வி. சுப்பிரமணியம், டி. ஏ. வி. நாதன் ஆகிய இருவர்களுக்கும் இவ்வூர் சுயமரியாதைச் சங்கத்தாரால் இரண்டு வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பட்டது. முறையே இருவரும் பதிலளித்தார்கள்.

பதிலளிக்கும் போது தோழர் சுப்பிரமணியம் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையும், பார்ப்பனரல்லாதார் கடமையையும் விளக்கிப்பாமர மக்கள் எளிதில் உணருமாறு சுமார் 2மணிநேரம்சொற்பொழிவாற்றினார். தோழர். வி. பார்த்தசாரதி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## விஸ்வநாதம்.

சென்றமாத மலாய்நாடு சென்றிருந்த திருச்சி தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் சென்றவாரம் மலாய் நாட்டிலிருந்து திரும்பிவந்து விட்டதாக ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## ஒத்திவைக்கப்பட்டது.

லால்குடியில் 21—8—32ந்தேதியில் நடைபெறவேண்டிய சுயமரியாதை மகாநாடு சில அசந்தர்ப்பங்களால் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது என காரியதரிசி எழுதுகிறார்.

## மணமகன் தேவை.

சுமார் 16 வயதுள்ளவரும், சாதாரள அழகுள்ளவரும், நல்ல சரீரமுடையவரும், இதுவரை மணமாகாதவருமான ஒரு பெண்ணுக்கு மணமகன் தேவை, பெண்ணுக்கு மலையாளம், தமிழ்நன்றாய் எழுதப்படிக்கத்தெரியும். விரும்புகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும். கடிதம் ரகசியம்.

Viyola C|o Kudi Arasu
Erode

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

தனிப்பட்ட ஸ்தானங்களைக்கொடுப்பதில் அதிக தடங்கல் இருக்கின்றதென்பது உண்மையாகும். ஆனால் மாதர்களுக்குத்தனி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டால், சமூகங்களில் பெண் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டால், தற்கால நிலைமையில் தற்கால நிலைமையில் ஒன்றும் மாறுதலேற்படாது.

இந்தியாவின் தற்கால நிலைமையை உத்தேசித்து சமூகங்கள் தங்களுடைய கோரிக்கைகளின்படி நன்மையைப்பெற இத்திட்டம் சரியான முறையில் ஏற்படுத்தப் பட்டதெனக்கூறுகிறேன். தற்சமயம் இத்திட்டம் சமூகங்களின் எல்லா கோரிக்கைகளையும் அளிக்கவில்லையென நினைத்துக்கொள்ளட்டும். ஆனால் பல தடவையும் அரசாங்கத்தார் தங்களுக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வரும்படியாக வற்புறுத்தியும் அதன்படி நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது ஞாபகமிருக்கட்டும்.

இந்துக்களே இதற்கு ஒருமுடிவுகூறவேண்டும். அவர்களுடைய தீர்மானமே புதிய அரசியல் ஸ்தாபனத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள தடங்கல்களையெல்லாம் களைந்தெறிந்து முன்னேற்றத்திற்கு வழியுண்டாக்கும். எல்லா இந்திய தலைவர்களும் இந்த நெருக்கடியான சமயத்தில், முன்னேற்றத்திற்கும், புதிய அரசியல் ஸ்தாபனத்திற்கும் வகுப்பு ஒற்றுமையே முக்கியமானதெனக் காண்பிக்கட்டும்".

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்பங்களும், தேனில் ஊறவைத்த மாம்பழத்தோடு பலா, வாழை ஆகிய முக்கனிகளும் ஏன்? இந்திரியத்தை அதிகப்படுத்தி காம இச்சையைப்பெருக்கக் கூடிய வாதாம்பருப்பு, குங்குமப்பூ முதலியவைகள் கலந்த மரக்காலைப் படியாகக்காய்ச்சிய பசும்பாலேன்? இவைகளெல்லாம் துறவி

---

## பெண் தேவை.

சுமார் 22 வயதுள்ளவரும் திடகாத்திரமுள்ளவரும் முனிசிபல் கௌன்சிலரும் போதுமான பூஸ்திதிஉள்ளவரும் நல்ல அழகுள்ளவரும் இதுவரை கலியாணமாகாதவருமான ஒருவாலிபருக்கு ஒரு பெண் தேவை. விரும்புகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு கடிதம் எழுதித்தெரிந்து கொள்ளவும். கடிதம் ரகசியம்

Appar C|o Kudi Arasu
Erode

---

களுக்கு வேண்டற் பாலன வென்று எந்த நூல்களிலேனும் கூறப்படுகின்றனவா? இல்லையே. பணத்திமிரினால் அல்லவோ துறவிவேடம்பூண்டவர்கள் இவ்வாறு இன்பம் அனுபவித்துக்கொண்டு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பொருளை வீணுக்குகின்றனர்? இந்த உண்மை நமது நாட்டினர்க்கெல்லாம் தெரியாதா? தெரிந்தும் ஏன் சும்மா இருக்கவேண்டும்? இவர்களைக்கண்டித்து, இவர்கள் செல்வத்தைப் பறிமுதல் செய்து நாட்டின் நன்மைக்குப் பயன் படுத்த ஏன் கிளர்ச்சி செய்யக்கூடாது?

இன்று, அதிதீவிரச் சீர்திருத்தக்காரர்களாக இருக்கின்ற சுயமரியாதைக் காரர்கள் சொல்வதென்ன? மேற்கூறியவாறு பயனில்லாமல்வீணுகப்போகின்ற கோயில்களின் செல்வங்களையும், மடங்களின் செல்வங்களையும் பறிமுதல் செய்தோ, அல்லது வசப்படுத்தியோ மக்களுக்கு—தேசத்திற்குப் பயன் படுத்துங்கள்! என்றுதானே சொல்லுகிறார்கள்? இதைக் கேட்டவுடன், கோயில்களின் செல்வங்கள் மக்களின் நன்மைக்குச் செலவானால் மதம் போய்விடும், கடவுள் போய்விடும், புராணங்கள் போய்விடும்; மடங்களை ஒழித்துவிட்டால் மதங்களின் ஞாபகச் சின்னங்கள் அழிந்து விடும், மதங்களைப்பற்றி உபதேசம் செய்வோர் போய்விடுவார்கள், மதபீடங்களாக விளங்குவன மடங்களே யாகும்; ஆகையால் மடங்களின் சொத்துக்களில் கைவைக்கக்கூடாது அவைகளை அழிக்கக்கூடாது; இவ்வாறெல்லாம் செய்தால் "நாஸ்திகம்" பரவிவிடும், என்று சொல்லி விடுகிறார்கள்.

இதற்குச் சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் கூறும் பதில், பொதுமக்களின் பொருள் வீணாவதை விட—பொதுமக்களுக்கு எவ்வகையிலும் பயன்படாத கோயில்களும் மடங்களும் இருப்பதைவிட—அவைகள் இருந்துகொண்டு ஏழைமக்களை மேலும் மேலும் அறியாமையிலும், வறுமையிலும் அழுத்திக்கொண்டிருப்பதை விட—அவைகள் அழிந்து போவதனால்—மறைந்துபோவதனால் உலகம் முழுகிப்போய்விடப் போவதில்லை. அவைகள் ஏழைமக்களுக்குப் பயன்படுவதன் மூலம், மதம் அழிவதாயிருந்தால் அழியட்டும்; துன்பம் விட்டது; கடவுள் அழிவதாயிருந்தால் அழியட்டும்; அழிந்து போகும் கடவுளை எத்தனை நாளைக்குக் கட்டி வைத்துக் கொண்டு காப்பாற்ற முடியும்? புராணங்கள் அடியோடு மாண்டு போகவேண்டியதுதான்; ஆகையால் அவைகள் அடியோடு மாண்டுபோகட்டும்; என்றுதான் கூறுகிறார்கள். இதில் என்ன குற்றமிருக்கிறது? ஆகையால் வீண் அபிமானத்தையும், மூடநம்பிக்கைகளையும் விட்டு விட்டு, ஏழை மக்களைச் சீர்திருத்துவது எப்படி? அதற்குப்பொருள் எங்கேயிருக்கிறது? அப்பொருளை எவ்வழியிற் பெறுவது? என்பதை மட்டிலும் எண்ணிப்பார்ப்பீர்களாயின் மேலே நாம் கூறியவற்றின் உண்மை விளங்கும். இதை விட்டு, வெள்ளைக்காரன் வந்ததனால் நம் நாடு கெட்டுப் போயிற்று; ஏழைமக்கள் துன்பப்படுகிறார்கள்; ஆகையால் வெள்ளைக்காரனை விரட்டவேண்டும்; என்று பேசுவதில் பலனில்லை என்றே கூறுகின்றோம். முதலில் நம்மைத் திருத்திக்கொண்டு பிறகு வெள்ளையருடன் சண்டை செய்வோம். அதற்கு நாங்களும் முன்னிற்போம்.


## அமுத ரத்னாகரம்.

(சிறந்த தாதுபுஷ்டி லேகியம்)

உடலிலுள்ள சகல தாதுக்களையும் வளர்த்து பஞ்ஞேந்திரியங்கட்கும் நல்ல வலுவைக்கொடுத்து, ஆயுளை வளர்ப்பதற்கும், அறிவு விர்த்தி, சுறுசுறுப்பு, உடல்வலிவு முதலியவைகளை உண்டுபண்ணுவதற்கும் இதற்கிணையான லேகியம் வேறெதுவுமில்லையெனவே கூறலாம். இதன் சிறந்த குணத்தைக்கண்டு இங்கிலீஷ் டாக்டர்கள் பலரும்வாங்கி உபயோகித்து வருகின்றனர்.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது.

40 நாள் மருந்து 4—0—0. 20 நாள் மருந்து 2—4—0.

அருணகிரி அன் கோ.,
தபால் பெட்டி நெ. 222,
49 லிங்க செட்டி தெரு, சென்னை.

புருஷர்களுக்கு அசக்தியை போக்கடித்து புருஷத்துவம் தாதுபுஷ்டி ஜீரணசக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் டானிக்.

## மன்மத குளிகை

எந்தக்காரணத்தினாலும் இழந்தபலம், தாது நஷ்டம் போகசக்திக்குறைவு, மன உற்சாகம், இவைகளை திரும்பக் கொடுத்து இல்லற ஒற்றுமை வீரியவிர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 20 குளிகை ரூ. 2—0—0 60 குளிகை ரு. 5—0—0.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## ஜீரணாதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

அஜீரணம், மலச்சிக்கல், பசியின்மை, நெஞ்செரிவு, புளி ஏப்பம், குலை எரிச்சல், மார்பு நோய், குன்மம், வாய்நீர் ஊறல், அரோசிகம் முதலியவைகளை நீக்கி, உண்ட உணவை செரிக்கச் செய்து, தினந்தோறும் ஒழுங்காக மலத்தைக்கழிக்கும். சாப்பிடுவதற்கு மிக்க ருசியுள்ளதாயிருக்கும்.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது.

1 டப்பி விலை ரூபாய் 2—0—0.

அருணகிரி அன் கோ.,
தபால் பெட்டி நெ. 222,
49 லிங்க செட்டி தெரு, சென்னை.

## தஞ்சை ஜில்லா சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு

### திருவாகக்கமிட்டிக்கூட்டம்

3-8-32ல் மாலை 5-மணிக்கு ஜில்லாச்சுயமரியாதைச் சங்க நிருவாகக் கூட்டம் பட்டுக்கோட்டைப் பஞ்சாயத்துக்கோர்ட்டுத் தலைவர் திரு. ஏ. இரத்தினம் அவர்கள் "ஹாலில்" நிகழ்ந்தது. மேற்கூட்டத்திற்கு சித்தக்காடு திரு. கே. இராமையா அவர்கள் தலைமை பூண்டார்.

ஜில்லாத்தொண்டர் மகாநாடு கூட்டமுன்னரே அறிவித்தமைக்கிணங்கிச் ஜில்லாவின் பலபாகத்திலிருந்து தோழர்களான; பாலக்குருச்சி ஜமீன் பி. ஏ. சண்முகசுந்திரனார், கே. ஏ. எம். மாணிக்கம் மிராசுதார், திருவாரூர் வி. ஏ. வைத்தியனாதர், கே. இராமையா, சித்தக்காடு இரத்தினசபாபதியார், நீடமங்கலம் எஸ். ஏ. சாமியய்யா, ஆருமுகனார், தம்பிக்கோட்டை டி. எம். தருமலிங்கனார், கொய்யா, ஜனுப்முகையதீன் பிச்சை மரைக்காயர், எஸ். நடராசன் முத்துப்பேட்டை ஜீ. சீனுவாசனார் அறந்தாங்கி, எம். சுப்பிரமணியனார் காரைக்கால், ஏ. ராமதாஸ், ஆர். சீனிவாசன், ஏ. ரெத்தினம், எஸ். தருமலிங்கம், ஏ. சுப்பிரமணியம், ஜி. வி. ராஜன், நவநீதகிருஷ்ணன், என். பிச்சையா முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தஞ்சை ஜில்லாச் சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டை இம்மாத மூன்றும் வாரத்தில் நடத்துவது.

மகாநாட்டிற்குத் தலைவராகத் திருவாளர்கள் சௌந்திரபாண்டியனார் எம். எல். சி., அவர்கள் வி. வி. இராமசாமியார் முனிசிபல் சேர்மன், விருதுநகர் சொ. முருகப்பா, "குமரன்" ஆசிரியர் இம்மூவரில் ஒருவரைக் கேட்டுக்கொள்வது.

சமதருமக் கொடியேற்று விழா வாற்ற சிவகங்கை திரு. எஸ். இராமச்சந்திரனார் பி. ஏ. பி. எல்., கற்பூரசுந்திரபாண்டியனார் பி. ஏ., பி. எல்., இவர்களில் ஒருவரைக்கேட்டுக்கொள்வது.

மகாநாட்டுத்திறப்பாளர்களாக திருவாளர்கள் திருஞானசம்பந்தர், டி. வி. சுப்பிரமணியம், சாமி சிதம்பரனார் இம்மூவரில் ஒருவரைக்கேட்டுக்கொள்வது.

மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவரையும், காரியதரிசிகளையும், விளம்பர அதிகாரியையும், கமிட்டிமெம்பர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் பிரதிநிதிகளுக்கு, நாட்டின் பொருளாதார நெருக்கடியை நோக்கி எவ்வித கட்டணமும் இல்லை எனவும், மகாநாட்டின் சகல செலவுகளும் கமிட்டி மெம்பர்களின் சொந்தப் பொருப்பிலேயே நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேல் நிகழ்ச்சிகட்குப்பின் தஞ்சை ஜில்லாச்சுயமரியாதைச் சங்கத்தின் புதுவருட நிருவாகஸ்தர்களைத்தேர்ந்தெடுக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---


# நீங்கள் விரும்புவதென்ன?

## அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் நீங்கும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேணடுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

[6ம் பக்கத்தொடர்ச்சி]

கூட வாங்கி சந்தாவில் சேர்க்க சந்தர்ப்பம் அடைகிறார்கள். ஆனால் மற்றவரோ அவ்வகை வசதி பெற முடியாது என்பதை யாவரும் அறியலாம் நாடெங்கும் பிரதி ஜில்லாவிலும் கதர் நிதியை யதாயாகமாய் பிரித்துக்கொடுத்து கதர் உற்பத்தி செய்கிறதற்கில்லை என்பதை அந்த சர்க்கா சங்கத்தாரே கண்டு ஒவ்வோர் இடத்தில் உற்பத்திமிகுதியாயும், ஒவ்வோர் இடத்தில் விற்பனை மிகுதியாயும் நடத்தி வருகிறார்கள் என்பதால் விளங்கும். இந்த நிலைமையில் நூற்க விரும்புவோர் சிலர் ஏற்பட்ட போதிலும் சந்தாதார் அபிவிருத்தியடைய வேண்டுமென்றாவது, ஒட்டர்கள் அபிவிருத்தியடைய வேண்டுமென்றாவது கதராபிவிர்த்திக்கென்றே பொது நிதிசேர்த்தோர் கவனித்து பிரதி தாலூகாவிற்கும் சிலஇடத்தில் பஞ்சு கொடுத்து நூல் வாங்க திட்டம் ஏற்படுத்தாதிருக்கும்போது மற்ற வியாபாரிகள் இந்த அவசியத்துக்காக மட்டில் பஞ்சு வருவித்து கொடுத்து நூல் வாங்கி விற்கமுடியுமா என்பதை நடை முறையில் நாடெங்கும் விசாரித்து கண்டு கொள்ளுங்கள். ஒருகல்வியாக, நூற்றல்என்பதை மக்களுக்கு போதிக்க சந்தர்ப்பம் எடுத்துக்கொள்வதென்றாலே பத்தில் ஒரு ஜனங்கள் சேர்வதும் துர்லபம் ஆகஅமையும். எப்போதும் கற்ற பாடத்தையே படித்துக்கொண்டிருக்க வேண்டும்என்று ஒரு திட்டம் வகுத்தல் மாணாக்கர்கள் துடர்ச்சி செய்யாமல் விலகவேண்டியதற்காகவே என்று அறியக்கிடக்கிறது. ஒரு டிராயிங்கு, ஒரு சர்வே ஸ்கூல், டைப்ரைட்டிங்கு போன்ற ஒரு கல்வியே தவிர நூற்றல் என்பது மிகசிக்கலான அமைப்புடையதல்ல. எந்தக் கல்வியும் பழகப்பழக மேன்மைபெறும் என்பதற்காக தேவையில்லாது போகும் இடத்தில் தெரிந்தவித்தையையே பழகிக் கொண்டிருந்தாலும் பொது அறிவுடையோர் செய்கையில் சேராது. எந்த சௌகரியம் செய்வதாக பொது நிதி வாங்கிசேர்த்தார்களோ அந்த மூலக்கொள்கை விட்டு விட்டதால் அவர்களிடமுள்ள நிதியெல்லாம் இன்று ஒரு பெரிய வியாபாரியிடம் என்னமுறையில் நிர்வகிக்கப்படுகிறதோ அவ்விதமே நடைபெறுகிறதாயினும் வியாபாரிகளாயின் தாங்கள் கஷ்டப்பட்டு தேடிய பொருள் போட்டிருப்பதால் தவறான நஷ்டங்களுக்கு இடம் ஏற்படும் போது மிகவும் உணர்ச்சி காட்டுவர் இங்கு பொது நிதியானதால் அவ்வகை உணர்சசி காட்ட ஆசாமி கிடையாது, தொகைவாங்கிச் சேர்க்க காரணபூதமான மகாத்மாவுக்கு எல்லாவற்றிலும் பொருமையே பிரதான பூஷணம்.

இந்நிலைமையில் சங்கத்தார் வந்துவிட்டால் தங்கள் தொகையில் ஒரு ரூபாய் உதவிசெய்தால் அத்துடன் எங்கள்தொகை ரூ ஐந்தை சேர்த்து தங்கள் யோஜனைப்படி கதர் தொழில் செய்கிறோம் என்று கேட்டாலும் அவர்களிடமுள்ள தொகையை பகிர்ந்து கொடுக்க அங்குள்ள நிர்வாகிகளுக்கு மனம் வரவில்லை. இந்த கொள்கையை அனுசரித்தால் கதர் மிகப்பரந்த நிலைக்கு விருத்தியாகும் இப்போதைவிட 5 பங்கு இடங்களில் வேலை செய்யும் என்று அவர்களுக்குத்தெரியுமாயினும் தாங்கள் பிறரிடம் இணங்கி கதர் வேலை செய்யவோ, தாங்கள் அனுபோக உண்மையை பிறர்க்கு காட்டிக் கொடுக்கவோ மனத்துணியவில்லை யென்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

இத்தகைய மனோ நிலைக்கு வந்த அன்னார் தங்களிடமுள்ள நிதியுடன் அமைகிறார்களா என்றால் கதர் தொழிலை இதர பிரஜைகள் எங்கு தொட்டுச்செய்தாலும் அவர்களுக்கு தாங்கள் ஏதோ மேற்பார்வை செய்தாக வேண்டியிருப்பது போலும் அந்த அவசியத்துக்கு தொகை கட்டி ரசீது பெற்றால் அதற்கு அத்தாட்சி பத்திரம் என்று பேரிட்டுத்தருவதாயும் அதை வாங்கி வைத்துக் கொண்டால் இந்த கோஷ்டியினர் வாங்கும் வரித்தொகைக்கு ஈடான பலனடையத்தக்க மார்க்கங்கள் காட்டித்தருவது போலவும், ஒரு விதியமைத்து உற்பத்தி இடங்களுக்கெல்லாம் இம் 1க்கு ரூ 25-ம் விற்பனை இடங்களுக்கெல்லாம் இம் 1க்கு ரூ 15-ம் செலுத்த ஏற்படுத்தியிருக்கிறார்கள் இதனால் அச்சங்கத்தார் செய்யக்கூடிய நன்மை எதுவுமில்லாதிருந்தும் ரூ 25-ம்செலுத்தாத ஒருவன் 4 பவுண்டு நூலுக்காக ஒருகரிஒடி சுத்தக்கதர் துணியென்று விற்க முடியாமல் நிற்பந்தமும்ஏற்படுகிறது. இதைப்பற்றி ஒருசில கடைக்காரர்களே வியத்தமாக ஆக்ஷேபித்து ஷி சர்க்கா சங்கத்தாருக்கு எழுதிய சில கடிதங்களின் முழுவிபரமும் அடுத்த வாரத்தில் தருகிறோம்.

(தொடரும்)

---

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

மனிதர்கள் இந்த கத்தோலிக்கர்களால் மதவெறிகொண்டுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் மிகு விரிவாயும் விளக்கமாயும் பற்பல சரித்திர ஆதாரம்கொண்டு ரெவரெண்டு. டி. பி. ஹண்ட் (Rev. T. P. Hunt) தாம் எழுதிய கிறிஸ்து மார்க்க அத்தாட்சி (Evidences of christianity) என்ற நூலில் கூறியிருக்கிறார்.

ஐந்தாவது நூற்றாண்டில் ஓர் சிறந்தகலைஞான வல்லளாகிய கிப்பதியா (Hypatia) என்பாள் தன் வண்டியிலிருந்து, தான் பிரசங்கஞ்செய்யும் மண்டபம் நோக்கிச் சென்றபோது, அவளைப்பிடித்து இழுத்து அலெக்சாண்ரியா என்னும் பெரிய கோவிலுள்ளே கொண்டுபோய் நிருவாணமாக்கி, அவள் தோலைஉரித்து, அவளை அடித்து,அவள்சரீரத்தை இப்பியோடுகளினாலே சின்னபின்னங்களாக வெட்டிப்பின்னர் எரித்து விட்டார்கள். அலெக்சாண்டிரியாவிலுள்ள வாலிபன் ஒருவனைப் பழைய தெய்வங்களை வழிபடும்படி செய்ததமையே அவள் செய்தகுற்றமாகும். கிறிஸ்தவ பிஷப்பாகிய சைறில்(Cyril) என்பானுடைய சேனையாகிய துறவிகள் பைபிளிலேயுள்ள யாத்திராகமம் 22-ம் அதிகாரம 20-ம் வசனத்திலே, "கருத்தா ஒருவர்க்கே ஒழிய வேறே தேவர்களுக்குப்பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன்" என்று சொல்லப்பட்ட விதிகொண்டு அவளை மேலே சொல்லியவாறு கொலை செய்துவிட்டார்கள்.

தியடோறு என்னும் சக்கரவர்த்தினியின் பரிபாலன காலத்திலே (Empress Theodopa) ஆர்மினியாவில் நூறாயிரம்பேர் பிடிபட்டு அவர் பொருள் பறிபட்டு அவர்கள் சரீரங்கள் அக்கினியிலே பொடிபடுத்தப்பட்டன.

1099௵ ஜெருசலேம் நகரம் பிடிபட்டபோது கிறிஸ்துவின் சைனியங்கள் முழங்கால்களினின்று எழுந்து நகரத்துத் தெருக்கடோறும் திரிந்து ஆண்பாலர் பெண்பாலர் பிள்ளைகளானோரை யெல்லாம் அற்பமேனும் இரக்கமின்றிக் கொலை செய்து விட்டார்கள். இலான்குவிடாக் (Languedoc) என்னும் செழிப்பும் சீர் திருத்தமும் உள்ளதுமாகிய தேசம் பாழுங்கிறிஸ்தவர்களாலே பாழாக்கப் பட்டொழிந்தது. அத்தேசத்து நகரங்கள் சுடப்பட்டொழிந்தன. குடிஜனங்கள் நெருப்பாலும் வாளாலும் மாணடொழிந்தார்கள். பேசியார்ஸ் என்னும் நகரத்தை எரித்துஉடைத்து அழிக்கப்புகுந்த போது மனுஷனெனஉடல் எடுத்தான் ஒருவனையும் உய்யவொட்டாது அறுபதினாயிரம் பேரை அழித்துவிட்டார்கள். கடவுள் தம் சொந்தம் எதுவென அறிவார் எவரையும் தவறவிடாதீர்கள்! எல்லோரையும் கொல்லுங்கள்! என்பதே அந்த கிறிஸ்து சேனைக்குக் கொடுக்கப்பட்ட சட்டமாம். பைபிளின் உபாகமம் பதின் மூன்றாம் அதிகாரத்திலே விதிக்கப்பட்ட யேகோவாவின் துஷ்ட கட்டளையைக் கைக்கொண்டு தங்காரியத்தை மேலே கூறியவாறு இரக்கமின்றி முடித்தார்கள்.

1480௵ பெர்டுனண்டு அரசனாலும் அவன் மனைவியினாலும் ஆண்டலூசியா என்னும் மாகாணத்தில் மூவாயிரம் பேர் நெருப்பிலிட்டு பொசுக்கப்பட்டார்கள். பதினேழாயிரம் பேர் வேறு வகையாக தண்டிக்கப்பட்டார்கள். இறுநூற்று முப்பத்தாறு வருஷங்களுக்குக் கிடையிலே ஸ்பானியாதேசத்தில் உயிரோடு நெருப்பிலிட்டு எரிக்கப்பட்டோர் தொகை முப்பத்தோராயிரத்துத் தொளாயிரத்துபன்னிரண்டு பேர். சியுடட்றீயல் என்றும் இடத்திலே தொளாயிரத்தைம்பது பேர் உயிரோடு தகிக்கப்பட்டார்கள். ஸ்பானியாவிலே, இறுதியாக நூற்றேழு வருஷங்களுக்கு முன்னையதாகிய 1731௵ நவம்பர் மீ 7ம் தேதி பேயோடிணக்க முடியவளென்று கொண்டு ஏழைப் பெண்ணொருத்தி நெருப்பிலிட்டெரிக்கப்பட்டாள். நெதர்லாண்ட்ஸ் (Nether lands) தேசத்திலே அல்வா என்பான் தனது பரிபாலனம் செலுத்தப்பட்ட நாலைந்து வருஷங்களுக்குள்ளே பதினெண்ணாயிரம்பேரைக் கொலைசெய்து விட்டேனென்று புளுகினான். ஒருவருஷத்திலே எண்ணாயிரம் பேர்தகிக்கப்பட்டும் வதைக்கப்பட்டும் போயினர்.

1566௵ ஐம்பதினாயிரம் பேர் கொலை செய்யப்பட்டார். பாரீஸ்பட்டணத்திலே 1572௵ ஆகஸ்டு மீ 24 தேதி ஸீபூஜ் நட்என்னும் ஓர் சாராரில் ஆயிரத்து நானூறு பேரை ஓடவிட்டு அவர்மீது அரசன் தனது அரண்மனைச் சன்னலிலிருந்து பாணப்பிரயோகம் செய்து, அவர்களைப்பறவைகள் போலக்கொன்றான். தம் மதத்துக்குச் சேரா விசை யாதோரை நன்றாகக்கட்டி, வேதனையக்கிரத்துக்குள்ளே செலுத்தி, அதன் வாயினுள்ள விரிந்த வாயுள்ள குழாய்களை மாட்டி, அக்குழல் வழியாக அவர் தொண்டையிலே இறங்கும்படி கிராக்ஷாரசத்தைப் புகைகிளம்பப் புகட்டி,அவர் அறிவை மயக்கிக் கத்தோலிக் கிறிஸ்தவராய் வருவோமென்று சொல்லுவண்ணம் செலுத்தி வருத்தினார்கள். அம்மட்டோ? அவர்களை முற்றும் நிருவாணிகளாக்கி, ஆயிரவகைப்பட அவமானம் செய்து தலையிருந்து கால் பொருக்கக் குண்டூசிகளினாலே குற்றிப்பேனாக்கத்திகளினாலே வெட்டி, ஒழுகக்காய்ச்சிய குறடுகளினாலே அவர் மூக்குகளை கிள்ளித்துவிட்டார்கள்.

செக்கஸ் அங்குலேன்ஸ் என்னும் வைத்தியர் ஒருவர் புளோரென்சிலே 1337௵ கிறிஸ்தவரால் தகிக்கப்பட்டொழிந்தார், 1415௵ ஜோன் ஹுன் என்பவரும் சுட்டொழிக்கப்பட்டார், ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டு தகிக்கப்பட்டார், 1619-௵ கலைஞானமறிந்த இத்தாலியதேசத்து தத்துவ ஞானியான வாணினி என்பாருடைய நாக்கைக்கிழித்து தவுலவுஸ் நகரத்திலே அவருடலை நெருப்பிலிட்டுப் பொரித்துவிட்டார்கள். ஸ்காத்லாந்து மேலைப்புறத்திலேயுள்ளாருடைய இடங்களெல்லாம் அழிக்கப்பட்டன; வீடுகள் எரிக்கப்பட்டன; மனிதர் சித்திரவதை செய்யப்பட்டனர், பெண்கள் கற்பு நிலைகுலைக்கப்பட்டனர்; 1770-௵ உத்திரவில்லாதபடி பிரசங்கம் செய்தவர் எவரும் கொலை செய்யப்படத்தக்காரென்று மஹாமந்திரசபையிலே சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டது. ஸ்காத்லாந்தார் தம் பொருள் எல்லாம் இழந்தார், உடையெல்லாம் கிழிக்கப்பட்டார்; வயல்களிலே நிருவாணமாக சாகவிடப்பட்டார்; அநேகர் அதிபயங்கரப்படத்தக்க சித்திரவதை செய்யப்பட்டார்; தாய்மார் கைகளிலிருந்து பிடுங்கி எடுக்

கப்பட்ட பிள்ளைகள் தூற்றப்பட்டார், தாய்மாருக்கும் அவர் பெண் குழந்தைகளுக்கும் நேர்ந்த கொடிய விதியைநோக்கினல் அவரைக்கொலை செய்து விடுதல் அதினும் மிக இனியதென்று தோற்றும்; ஓர் குருவுடைய வீட்டின் கீழப்புறத்தே தவளைகளும் வேறு விஷ ஜந்துக்களும் நிறைந்த ஆழமாகிய குழியொன்றிலே பெண்ணெருத்தியைப் பொதித்துவிட விதித்துவிட்டார்; அவள் அந்த நரகக்குழியிலே கிடந்து அலறிக் கூவிய சத்தம் வெகுதூரத்துக்கு எட்டியதாம். வேறு இருவர் பெருவிரல்களை ஒன்றேடொன்று கயிற்றிலே பிணித்து மரத்திலேமாட்டி இரவுமுழுதும் தொங்கும்படி செய்து வருத்திவிட்டார்கள். மறெருபெண்ணைப் பிடித்துக்கட்டி அவள் விரல்களிலே பல நீண்டநேரம் தீயாற்சுட்டு வருத்தினமையால் அவள் மனம் மயங்கிப்போயினள். அவள் தன் கைகளிலொன்றை இழந்து சில நாளைக்குள்ளே இறந்து போயினள்.

5-வது நூற்றாண்டில் ஏபீஷியஸ் என்னுமூரில் நடந்த பெரிய பாதிரிகள் கூட்டத்தில் பிளேவியம்ஸ் என்னும் பாதிரி, கிறிஸ்துவுக்கு விரோதமாக பேசினதுபற்றி வதைத்துக் கொல்லப்பட்டான். அவன் கட்சியில் சேர்ந்தவர்கள் அடிபட்டார்கள் என ஐரோப்பிய தேச சரித்திராசிரியர்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

1229-ம் வருஷத்தில் தொலூஸ் (Toulouse) என்னுமூரில் நடந்த பெரிய மீட்டிங்கில் ஊர்கள் தோறும் கூட்டங்களேற்படுத்தி, ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு குருவும் இரண்டு சீஷர்களும் இருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அக்கூட்டத்தார், அந்த ஊரில் கிறிஸ்தவர்களாகாதவர்களைப் பிடித்து கிறிஸ்தவர்களாக்கவும், ஆகமாட்டோமென்பவர்களைக்கொலை செய்யவும் வேண்டும். இதற்கு மேல் விசாரணைக் கர்த்தர் 9-வது கிரேகிரி (Gregory IX) யாம். கிறிஸ்தவராகாதவர்களை நிர்வாணமாக நிறுத்துதல், மொட்டையடித்தல், வேதனை செய்யும் யந்திரத்தில் படுக்கவைத்துக் கட்டல், அதிலேயே கால்களை விரித்துக் கட்டல், சதை நசுங்கவுடலை யந்திரத்தில் வைத்தழுத்தல் முதலிய கொடுமைகளை ஷை கூட்டத்தாரும் அவர்களைச் சார்ந்து பின்வந்தவர்களும் செய்தார்களென சிவிலி என்னுமூறுக்கு விசாரணைத் தலைவனுயிருந்தவனின் கைப்புத்தகத்தில் வரையப்பட்டிருந்தது. இதன் விரிவை டாக்டர் ரூல் [Dr. Rule] என்பவரால் எழுதப்பட்ட ஷை விசாரணைச் சரித்திரப் புத்தகத்தில் காணலாம். [Appendix to Vol. I. P. 339 to 359 Dd. in 1874] ஆளைவைத்து அளுத்திக்கொல்லத்தக்க [Chevolet] என்னும் யந்திரத்தில் பிகுவாயழுத்தித் துணியை தொண்டைவரையிலழுத்திக் கொல்லல் முதலியன செய்தார்கள்.

ஸ்பானியா தேசத்தில் ஷை கூட்டத்தாரால் 31,912 பேர் உயிரோடு கொளுத்தப்பட்டார். குரூரமாக தண்டிக்கப்பட்டவர்கள் 2,91,450 பேர். அநேக குடும்பங்கள் அழிக்கப்பட்டன.

"தங்களுடைய மதக்கோட்பாடுகளுக்கு விரோதமாய் பிரசாரம் புரிந்த கலீலியே [Calileo] என்னும் வானசாஸ்திரியை சிறையில் சித்திரவதை செய்ததும், ப்ரூனே [Burno] அத்வித சாஸ்திர வல்லுனரை அக்கினிபகவானுக்கு அர்ப்பணம் செய்ததும், பிரஞ்சு தேச விற்பன்னர் வால்டேர் [Voltaire] என்பவரை ஆயுட்கால முழுவதும் சிறையிலிட்டனர். இன்னும் பல நாஸ்திகர்களைக் கொன்றவர்களையும் மற்றும் பல 'கொலைச்செயல்களும் ஹாலம் [Hallam] ட்ரேபர் [Draper] எலக்கி [Lecky] முதலியோர்களின் நூலில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.

புரோட்டொஸ்டாண்டு மதஸ்தர்கள் மதத்தை தழுவாத 1200 பேர்களை ஒரு சமயத்தில் கொலை செய்யப்பட்டதாக டாக்டர் பிரிஜ் வாட்டர் [Dr. Bridge watter] எழுதியிருக்கிருர். காஷெல்பட்டினத்திலுள்ள மேற்றிராணியாரின் கால்களை சுத்தியலால் அடித்து முறிக்கப்பட்டது. நகங்களில் ஊசிகள் சொருகப்பட்டன. நீற்றாத சுண்ணம்பும் எண்ணையும் கலந்து இரும்பு பூட்ஸில் விட்டு அதிலவருடையகால்களை வைத்து வெகுநாளைக்கு அப்படியே விட்டுவிட்டபடியால் கால்களின் மாம்சமெல்லாம் நாளுக்கு நாள் இத்துப்போய் விழுந்து விட்டது. பின்னரும் கால்களை வெட்டி மூளை தெறிக்க தடியாலும் கல்லாலும் அடிக்கப்பட்டாராம்.

எலிசபெத்து அரசியின் காலத்தில் கத்தோலிக்குருக்களும் சந்நியாசியுமாக 51 பேர்களை தேசப்பிரஷ்டம் பண்ணி நடுக்கடலில் கொண்டுபோய் தாழ்த்துவிடப்பட்டதாம். இப்படிப்பட்ட பல ஆயிரக்கணக்கான கொலைகளைப்புரோடஸ்டாண்டு மார்க்கத்தார் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. (அயர்லாந்து தேசத்து சங்பேட்லி என்பவரால் எழுதப்பெற்ற "சத்திய வேதத்தைக் கண்டுணரநிச்சயமானவழி" என்னும் நூலைப்பார்க்கவும்.)

(தொடரும்)

## திருச்சி மருத்துவகுல சங்கம்.

ஷை சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் 3-8-32ந் தேதி நடைபெற்றது அதுசமயம் சங்கத்திற்கு நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

## கூட்டம்.

27-8-32 சனிக்கிழமை மாலை 5-மணிக்குமேல் கோலார் தங்கவயல் மாரிகுப்பம் தென்னிந்திய பௌத்த சங்கசபா மண்டபத்தில் திருவாளர் ஜி. அப்பாதுரையார் தலைமையில் ஷை சங்க வித்வானும் தமிழ் ஆசிரியர் திரு. இ. நா. ஐயாக்கண்ணு புலவரும் திரு. எம். இராமசாமியரும் சொற்பொழிவாற்றுவார்கள். சகோதரிகள் சகோதரர்கள் வரும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம் என கௌரவகாரியதரிசி எழுதுகிருர்.

தபால் படிப்பின் அற்புதம்.

1000-மாணவர்கள்.

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம்!

தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸ்களைத் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர் ஹையர்கிரேட் உபாத்திமார்கள, குமஸ்தாக்கள், ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப்பிரயோஜனமானது. பிராஸ் பெக்டசுக்கு உடனே ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,

அன்டைபன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆறுமுகநேரி S. I. R.

இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோகம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைகொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S. I.

Goshaye office pillss.
கோஷாயி
ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர்
Dr. T. K. V
Chalam.

மலசிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலராபைரி) கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு. அதனால் கேடு உண்டெனில் இயற்கை அதற்குத்துணை நில்லாது.

ஃ ஃ

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்) எனவரும் புறநானூற்றுப்பெருமொழியை நோக்குக. இவ்விழுமிய கொள்கையுடையார் தமிழர் என்பதை உணர்க. இவர் வழிவழிவந்த இக்காலத்தமிழர் சிறுமைப்பிரிவுகளில் கருத்திருத்தல் அறமாகாது. "பழந்தமிழர் பழந்தமிழர்" என்று பேசுவதால் என்ன பயன்? அவர்கள் வழிநிற்க முயல்வது பெருந்தகைமையாகும்.

ஃ ஃ

பழைய தமிழர்கள் பெரிதும் இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்வு நடத்தினார்கள். அதனால் இயற்கை வளர்ச்சிக்கு அவர்கள் வாழ்வு துணை நின்றது. பின்னே அவ்வாழ்வு குலைந்தமையான் இயற்கைவளர்ச்சி தடைப்படும் இடத்தில் பலதிறச் சிறுமைகள் உறுதல் இயல்பு.

ஃ ஃ

பிறப்புச்சாதியினின்றும், பெண்ணடிமை, தீண்டாமை முதலிய நச்சுக்குழவிகள் பிறந்தன. இச்சிறுமைகளைப்போக்க எழுந்த பேச்சுக்களும், எழுத்துக்களும், மலையெனவும், கடலெனவும் குவிந்தும் பரந்தும் கிடக்கின்றன. இவைகளைப்பற்றிப்பேசிப்பேசி என்நாவும் தழும்பேறிவிட்டது, எழுதிஎழுதி என்கையும் மரத்துவிட்டது. இடைக்காலத்தில் தோன்றி இந்நாளில் பெருந்துன்பம் விளைத்துவரும் நோய்களை எப்படிப் போக்குவது? இவைகளைப்போக்கப் பல மருந்துகள் சொல்லப்படுகின்றன. சிறந்த மருந்து கலப்புமணமேயாம். இம்மணம் பரவப்பரவப் பெருகப்பெருக மக்களுக்குள்சகோதர நேயம் வளர்வதற்கு இடமுண்டாகும்.

ஃ ஃ

கலப்பு மணத்துக்குப் பெண்ணுரிமை இன்றியமையாதது. பழந்தமிழர் காலத்தில் பெண்ணுரிமை இருந்தமையால் களவுமணம் நடைபெற்று வந்தது. காதல் மணம் கலப்பு வழியில் நடைபெறத்தொடங்கினால் சாதிப்பேய்தானே ஓடும். அப்பேய் ஓடினால் பெண்ணடிமை ஏது? தீண்டாமை ஏது? எல்லாம் ஒழியும் இதற்கு எவர் விரைந்து முனைந்து வருதல் வேண்டும்? இளைஞர்கள்! இளைஞர்கள்!! என்று சொல்லவேண்டுவதில்லை.

மாணவர் மகாநாட்டைத்திறந்த கோவை திரு. ம. இராமச்சந்திரன் செட்டியார் பிரசங்கத்தில் உள்ளவை:—

நம்முன்னோர்கள் ஒருமொழி, ஒரு வகுப்பு, நீதியின் பாற்பட்ட ஒருசட்டம் இவைகளைக்கொண்டிருந்தார்கள் என்றால் பலமொழிகள், பலஜாதிகள், பல சமயங்கள் இயற்கை நீதியினை உருட்டித்தள்ளும் பல சட்டதிட்டங்கள் இவைகளைப்புகுத்தப் பெற்றிருக்கும் நெல்லிக்காய் மூட்டையினராய் ஆகிய தற்காலத்தமிழர் தம் முன்னோர்களின் கொள்கைகளை எவ்வாறு அறிவார்கள்? தன்கணவன் போர்க்களத்தில் எய்போலவிழுந்து உயிர் விட்டதைக்கேட்ட பெண்மணி தன் கொங்கையில் பால் அருந்தும் மகனைப்பிடித்து முன்னிறுத்தி, கச்சுக்கட்டி, வாளைக்கையில் கொடுத்து போர்க்களத்திற்குச் செல்லும்படி கட்டளையிட்ட இந்நாட்டில் பட்டாசு வெடியென்றால் பத்தடி பயந்தோடும் நிலைக்கு வந்துவிட்டோம்அல்லவா?

ஃ ஃ

தமிழ்மொழியும் உயிருடன் நீண்டகாலம் இருக்கவேண்டும் என்னில் அதுஅசைந்துகொண்டும், பெருகிக்கொண்டும் இருக்கவேண்டும். அதாவது புதுஉணர்ச்சியும், புது எண்ணங்களும் ஏற்படவேண்டும். அவ்விதம் ஆனால் தான் புத்துயிர் தோன்றும். அவ்வித புத்துயிருக்குக்குறி புது உண்ணங்களுடைய நூல்களும், புது உணர்ச்சிகொண்ட செய்யுள்களுமேயாகும். இவையில்லாதவரையிலும், அல்லது குறைந்துவரும் வரையிலும் மொழிக்கு அழிவும் இறப்பும் தோன்றிவரும்.

ஃ ஃ

நூதன விஞ்ஞானப்பொருள்களை உணர்த்தும் சொற்கள் நம் தமிழ்மொழியில் இயற்றிச் சேர்க்கவேண்டாமா? விஞ்ஞான நூல்கள் ஆராய்வதற்கு இதர மொழிகளுக்கே ஏக வேண்டுமா? ஆங்கிலம் முதலிய முற்போக்குப்பாஷைகள் எவ்வாறு புதுப் புதுச்சொற்களை ஏற்றுக்கொள்ளுகின்றதோ அவ்விதமே நம் தமிழ்மொழியும் புதுச்சொற்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். பழைய முறைகளையே வைத்துக்கொண்டிருந்தால் நன்னூலார் "பழயன கழிதலும், புதியன புகுதலும்வழுவலகால வகையினானே" என்று ஏன் சொல்லவேண்டும்? நம்பண்டிதர்கள் பழைய புராணங்களை மாத்திரம் ஓதிக்கொண்டிருத்தலைவிட்டுப் புதுமுறைகளையும் தழுவவேண்டும்.

சமயமும், இலக்கணமும், இலக்கியமுமே ஒரு மொழிக்கு ஏற்ற உறுப்புகள் என்ற கொள்கை மாறவேண்டும். இம்மூன்றைத்தவிர தமிழர்கள் வேறு எந்தக்கலையைப்போற்றினார்கள்? விஞ்ஞான சாத்திரங்கள் தொழில் நூல்கள் முதலான பல துறைகளில் ஏன் நூல்கள் பிறக்கவில்லை? இவை இல்லாத வழி ஒருமொழியும் சீரும், சிறப்பும் ஏற்காது. பூதத்வம், பூதநூல், உடல் நூல், ரசாயனம், ககோளம், வைத்தியம், கணிதம், உயிர்நூல், முதலிய பல இயற்கை நூல்களும், தர்க்கம் நியாயம் சட்டம் முதலான தத்துவங்களும் தமிழருக்கு இன்றியமையாத நூல்களாகும். இவைகளுக்குத்தக்கபடி மொழியை விரித்துக் கொள்ளல் அவசியம்.

ஷை மகாநாட்டு வரவேற்புத் தலைவர் கே. சி. எம். வெங்கடாசலரெட்டியார் எம். எல். சி. அவர்களின் பிரசங்கத்தில் கண்டவை:—

நம்முடைய நாட்டிலோ ஜனங்கள் ஒன்று கூடி தன்னயங்கருதாமல் பொதுவிஷயங்களைப்பற்றி ஆராய்ந்து அபிப்பிராயம் கூறுவதென்பது ஒரு புதிய செயலாகவே எண்ணப் படுகின்றது. ஒரு கிராமத்திலோ, ஊரிலோ செல்வாக்குடையவன் ஒருவன், அறிந்தோ அறியாமலோ ஏதேனும் ஒரு அபிப்பிராயத்தைக் கூறினால், அவ்வபிப்பிராயத்தையே மற்றவர்களும் பின் பற்றுவதென்பது நீண்டகாலமாக இருந்து வரும் வழக்கம். சமீபகால முதற்கொண்டு தான் இவ்வழக்கம் சிறிது ஒழிய ஜனசமூக அபிப்பிராயம் தலைதூக்கிக்கி வரஆரம்பித்துள்ளது.

ஃ ஃ

மேல் நாட்டில் ஒளி என்பதைப் பற்றி எத்தனை புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். அப்புத்தகங்களில் சொல்லும் விஷயங்களில் நூற்றில் ஒரு பங்கை நம்மவர்களுக்கு எளிதில் விளக்கக்கூடிய புத்தகம் ஏதேனும் தமிழ் மொழியில் உண்டோ? என் அறிவிற் கெட்டிய அளவில் இல்லை என்றே எண்ணுகின்றேன். இவ்வாறே ஒளி, வெப்பம், தட்பம், மின்னொளி முதலிய வைகளைப்பற்றித் தமிழர்கள் எளிதில், உணர்ந்து கொள்ளக்கூடிய நூல்களும் இல்லை என்றே கூறலாம்.

ஃ ஃ

பஞ்சகா வியங்களையும், பதினெண் கீழ்க் கணக்கு நூல்களையும், பத்துப் பாட்டு, எட்டுத்தொகைகளையும், பாரத இராமயாண நூல்களையும், அந்தாதிகோவை முதலிய பிரபந்தங்களையும் படித்தலே தமிழன்னைக்குச் செய்யும் பெருந் தொண்டாக எண்ணிவிடக்கூடாது.

ஃ ஃ

நாளொன்றிற்கு ஒருரூபாய் கிடைத்து விட்டால் போதும் என்ற எண்ணம் போய், மணிக்குக் குறைந்தது ஒரு ரூபாய் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாக வேண்டும். ஜன சமூக வாழ்க்கை என்பது வேறு; துறவி வாழ்க்கை என்பது வேறு. ஜன சமூகவாழ்க்கையிலிருப்பவன், அச்சனசமூகம் அறிவிலும் பொருளிலும் எவ்வாறு விருத்தியடையக்கூடும் என்பதை யோசித்து யோசித்து அதற்கு ஏற்றமுறைகளில் முயற்சிக்க வேண்டும். "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளுக" என்ற மொழி எக்காலத்திலும் எவ்விடத்திலும் உங்கள் கண்ணுக்கு முன்பாக நிற்க வேண்டும்.

தமிழர் மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பிரசங்கத்தில் உள்ளவை:—

கலைத்திறன் சுருங்கச் சுருங்க கல்லாமாக்களுக்கு அடிமைப்பட்டு தமிழர் தம்நாகரிகத்தின் தனிச்சிறப்புக்களை மறந்து, பிறமொழியாளரின் இழிதகவான கொள்கைகளை மேற்கொண்டு, அடிமை வாழ்வில் அகப்பட்டு மீளும் வகைதெரியாது திகைத்து நிற்கின்றனர். நமது பிறவிப் பிணிகளாய் நம்மைப் பிணித்திருக்கும் சில ஆரியக்கொள்கைகளினின்றும் நாம் விடுதலை பெற்றாலன்றி நமது நாடு விடுதலையடையாது என்பது ஒரு தலை.

ஃ ஃ

துரைத் தனத்தார் வழங்கும் பட்டம் பதவி முதலிய வற்றால் அழகு செய்யப்பெற்ற பட்டதாரிகள், தமது உண்மை நிலைமையைச் செவ்விதின் உணராமலும், நாட்டின் நலத்தைச சிறிதும் கருதாமலும், கல்விவளர்ச்சிக்குச் சிறந்த கருவிதாய் மொழி அன்று என அறியாது கூறிக்கேடு விளைக்கின்றனர். உலக வழக்கு அழிந்தொழிந்து சிதைந்தமையால் பிணமொழி (Classical language) எனக் கருதப்படும் மொழிகட்குத்தனிச் சிறப்பும் ஆதரவும் இடங்கள் தோறும் தேடுகின்றனர்.

ஃ ஃ

உயர் தனிச் செம்மொழிகள் என அறிவுடையோர் போற்றும் சீரிய மொழிகளின் பெற்றிமைகளில் ஒன்றும் பொருந்தாத "இந்தி" என்னும் மொழி அரசியல் மேம் பாட்டிற்கு இன்றியமையாத சாதனமெனச்சாதிக்கின்றனர். பள்ளியிறுதி (S. S. L. C.) ஆதிய தேர்வுகளில் கட்டாய பாடம் ஆக்கவும் வேண்டும் என்கின்றனர். அம்மொழியின் வாழ்வு நேற்றைய தெனவும், அது பயிலிடம் மிகச்சுருங்கிய தெனவும், அரசியல் கிளர்ச்சியின் மேம்பரப்பில் நீர்க்குமிழிபோல் தோன்றி மறையும் கொள்கைகளைப் போன்ற பெற்றிமையதென்றும் நம்மவர் சிறிதும் சிந்தித்தாரில்லை.

ஃ ஃ

நம்மவர் வறுமையாலும் பிணியாலும் அறியாமையாலும் தம்மருகே இடரும் இன்னலு முற்று வருந்த, தாம் மட்டும் உண்டு களித்திருப்பது மனிதத்தனம் அல்ல வென்பதைக் கடைப்பிடித்து "யான் பெற்றஇன்பம் பெறுக இவ்வையகம்" எனத் தமிழ் மறை அறுதியிட்டது. பிறகு உயர்வு தாழ்வு வாய்ப்பதே முறை என்னும் கொள்கை தமிழ் நாட்டில் நுழையத்தலைப்பட்டதும், "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்," "சாதியிரண்டொழிய வேறில்லை"……… ………என்றெல்லாம் மூதறிஞர் கூறிக் கடிந்திருக்கின்றனர்.

ஃ ஃ

நமது முன்னேற்றத்திற்குத்தடையாயிருப்பன பலவென்றாலும், அவையனைத்தும் அறியாமை என்ற ஒன்றில் அடங்கிவிடும். அறியாமையாகிய இருளை நீக்குவதற்கு கல்வியாகிய விளக்கொளி ஒன்றே ஏற்றசாதனம்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

நமது காரியங்கள் கெடுவானேன்? மற்ற மனிதர்கள் குறுக்கிட்டால், ஏன் ஒருவன் காரியம் கெடா? பிராமணனுக்கும், சூத்திரனுக்கும் பிறப்பில் வித்தியாசமா? வளர்ச்சியில் வித்தியாசமா? உருவத்தில் வித்தியாசமா? உண்பதில், தின்பதில், உடுப்பதில், எந்த வாழ்வில் வித்தியாசம்? ஆதலின், ஒத்தை பார்ப்பானைக்கண்டால் நமது காரியம் கெட்டுப் போகுமென்ற எண்ணம், வீண் எண்ணமே. இந்தப் போலி எண்ணத்தால்

ஒருவனுடைய முயற்சி கெட்டுப்போகுமே யொழிய, மற்றொன்றில்லை. பதினாயிரம் தடவை, ஒத்தைப்பார்ப்பானை எதிரில் சந்திக்குங்காலை, எதுவும், நன்மை, தீமையோ, நேரிடுவதில்லை. ஆனால் இந்த 10000 தடவையில், ஒரு தடவை மாத்திரம் ஒத்தைப்பார்ப்பானை பார்த்த நிமித்தம், ஏதாகிலும் கெடுதி சம்பவித்தால், "சந்தித்த பிராமணனால் கேடு விளைந்தது, ஆதலால், ஒத்தைப்பிராமணனை எதிர்படசந்தித்தல், அபசகுனமென்று" கூச்சல்போடுகின்றோம். இதுதான் இந்த மூட பயத்திற்கு ஆதாரமென அறிக. இதே மாதிரியாகவே, மற்ற அபசகுனங்களைகருதுதல் வேண்டும். இந்த நியாயத்தின் வழுக்கை (error), *propter hoc, poster hoc*, அதாவது, முன் நிகழ்ந்தபடியே, பின்னும் நிகழும் என்று ஆங்கில தர்க்கத்தில் வழங்குவார்கள். இந்த குற்றம், பல வாதங்களில், அதாவது தர்க்க வாதங்களில் வழங்குகின்றபடியால் இதனை இங்கு சற்று விபரமாக எடுத்துரைப்போம். இந்த தர்க்க வழுக்கை, பல மூட பழக்கங்களுக்கு ஆதாரமாக இருந்திருக்கின்றன. இதனை சற்று விசாரித்து அறிதல் வேண்டும்.

எந்த சம்பவமும் (any occurrence) அதன் முந்திய சம்பவத்துடன் தொந்தப்பட்டிருப்பதைக்காணலாம். முந்திய சம்பவத்தை, எதுவென்று அறிவதுதான் கஷ்டம். சில சம்பவங்களுக்கு, அவைகளின் முந்திய சம்பவங்கள், தெரியாமலே இருக்கின்றன. அவ்வித முன் சம்பவங்களை [Preceding ocurrence or phenamenon] தெரிந்துகொள்வதுதான், மெஞ்ஞானத்தின் (Science) நோக்கு. சில வேளையில், கண்ணுக்குத் தென்பட்ட முன் சம்பவத்தை, பின் சம்பவத்தின் காரணமென்று கருதுகிறோம். ஆனால், அது விசாரணையில் அவசாதிர்யாகப் போகின்றது. இந்த இரண்டு நியாயங்களை, இரண்டு திருஷ்டாந்தத்தால், தெளிவுறும்படிச் செய்வோம்.

முன் கூறிய திருஷ்டாந்தமொன்றை எடுத்துக்கொள்ளலாம். பனைமரத்திலிருந்து, காக்கை பறந்ததும், பனங்காய் விழுந்ததாக வைத்துக்கொள்ளுவோம். இந்த இரண்டு சம்பவங்களை ஒன்றுக்கொன்று காரணகாரியமாக இருப்பதாக முதலில் எண்ணுகின்றோம். ஆனால், மறுமுறை காக்கைப் பறந்ததும், பனங்காய் விழாதபடியால், காக்கைப் பறந்ததால், பனங்காய் விழாததைக்கண்டு, பனங்காய் விழுந்ததற்கு, காக்கை காரணமாய் இருக்காது என்று எண்ணவேண்டிவருகிறது. இன்னும் அடுத்தபடி 3, 4, 5, 6 தடவை காக்கை பறக்கவும், பனங்காய் விழாததைக்கண்டு, பனங்காய் விழுந்ததற்குக் காக்கை பறந்த சம்பவம், காரணமாகாவென தீர்மானிக்கின்றோம். முதலில் நாம் அவசரப்பட்டு செய்த தீர்மானம் நடந்த சம்பவங்களை விசாரித்த பிறகு பொய்த்துப் போயிற்று. அதுபோலவே, ஒத்தைப்பார்ப்பானையோ அல்லது விதவையையோ, எதிர் பார்த்த சமயம், ஒருவேளை ஏதோ கெடுதி சேர்ந்திருக்கலாம். உடனே நாம் விதவைக்கும், நமக்கு நேர்ந்த விபத்துக்கும் சம்பந்தத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகின்றோம். ஆனால், ஒரு தடவை அல்ல, பல தடவைகளில் விதவைகளை, நேரில் கண்டகாலமெல்லாம் எதுவும் கெடுதி நேரிடாததைக் கண்டு, விதவைக்கும் நடந்த கெடுதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று எண்ணவேண்டிவருகின்றது. ஆதலின் ஏதோ ஒரு தடவை எதிர் கொண்ட விதவையை, தனக்கு நேர்ந்த கெடுதிக்குக் காரணகர்த்தாவாக்கிறது அவசர தீர்மானமாக முடியுமன்றோ? இதைத்தான் வழுக்கு வாதமென்று சொன்னோம். இது இவ்வாறு நிற்க, இரண்டாம் திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளுவோம்.

நீராவி மழையாகப்பெய்வதைப் பார்க்கின்றோம். இது ஒரு தடவை அல்ல, பல தடவையும் நீராவி மழையாகப் பெய்வதைப் பார்க்கின்றோம். அடுத்து அடுத்து இந்த இரண்டு சம்பவங்களை கவனித்து வந்தால் நீராவியும், மழையும் ஒன்றுக்குப்பின்னால் ஒன்று நிகழும் சம்பவங்களாகவே இருந்து வருகின்றன, மழைத்தண்ணீர் எந்தக்காலத்திலும் நீராவியிலிருந்தே புறப்படுகின்றது. நீராவி அன்றியில் மழை பெய்வதில்லை. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தோன்றப்பட்டே இருக்கின்றன. ஒருவேளை நீராவி மழையாக மாறுமல் இருக்கலாம். ஆனால் மழையோ எந்த காலத்திலும் நீராவியாகவே இருந்துமாறியதாகும். ஆதலின் மழைக்குக்காரணம் நீராவி என்று வழங்குகின்றோம். இந்த சம்பவம் விதவையைக் கண்டதும் கெடுதி நேரிட்ட சம்பவத்தைப்போல் அகஸ்மாத்தமான (accidental) அல்லது ஏகதேசமான சம்பவமல்ல. மழை எந்தக்காலத்திலும் நீராவியிலிருந்து மாரிய சம்பவமாகக்காணலாம். ஆனால் எதிர்படும் விதவைகளால் எதிர்படும் தடவைகளில் ஒருவனுக்கு கேடு நேரிடுவதை யாராகிலும் பார்த்து கருதுகின்றார்களா எனக்கேட்கின்றோம்? அல்லது கணக்கிட்டு இருக்கின்றார்களா எனவும் கேட்கின்றோம்?

ஒத்தைப்பார்ப்பானை எதிரிட்ட பயனாகவாவது, அல்லது விதவைகளை நேரிட்ட பயனாகவாவது நேரிட்ட கெடுதிகளைக்குறித்து யாராகிலும்பரீட்சித்துப்பார்த்தார்களாவெனக்கேட்கின்றோம்? இந்த விஷயங்களை வெகு இலகுவில் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம். சிலரை வீட்டைவிட்டு புறப்படும்படிச்செய்து அவர்கள் தங்கள் வேலைக்கு புறப்படும் சமயத்தில் விதவைகளை எதிர்கொள்ளும்படிச்செய்து யார்யாருக்கு கெடுதி சம்பவிக்கின்றதை குறிப்பிட்டுப் பார்த்தால் விதவைகளால் வந்தகேட்டை தெரிந்து கொள்ளலாம். இதை பரீட்சித்துப்பாராமலே ஏக தேச சம்பவத்தைக்கொண்டு விதவைகளை எதிரிட்டால் கேடுவரும் என்று பிதற்றுவதால் வந்தஞானமென்ன?

விதவையை எதிரிட்டால், ஏன் கேடுவரும் என்பதையாரும் விசாரித்தார் இல்லை? விதவையை எதிர்ப்பட்ட தினமெல்லாம் கேடு சம்பவிக்கின்றதா? அப்படியானால் யார் பரீட்சித்துப்பார்த்திருக்கின்றார்கள்? எத்தனை தடவை விதவைகள் முன் எதிர்ப்பட்டார்கள், எத்தனை தடவைகேடு சம்பவித்தன? விதவைகளுக்கும், நீர் கோரிப்போகும் விஷயத்திற்கும் என்னசம்பந்தம்? விதவைக்கும்மற்ற ஸ்திரீகளுக்கும் என்ன வித்தியாசம். விதவை என்பதும் சுமங்கலி என்பதும் நாம் வைத்த பெயர்தானே? பெயர் வித்தியாசத்தால் கேடும் நன்மையும் எப்படி வரும்? இன்று விதவையாயிருப்பவள் நாளைக்கு சுமங்கலியாய் விடுவாள் "விதவை" என்பதும் "சுமங்கலி" என்பதும் வெறும் Convention வழக்கச் சொல்தானே? சுமங்கலி எதிரிட்ட காலமெல்லாம் நன்மைதான் உண்டாயிற்று என்று சாதிப்பார் யார் இருக்கின்றார்கள் எனக்கேட்கின்றோம்? சுமங்கலி எதிர்பட்டும் போன காரியம் கைகூடாத சந்தர்ப்பங்கள் எத்தனை எனவும் கேட்கின்றோம்? இவைகளை எல்லாம் கணக்கெடுத்து அதாவது பரீட்சித்துப்பாராமல் சுமங்கலியைக் கண்டால் அசுபம் என்று வெறும் வழக்கச்சொல்களை நம்பி மோசம் போவானேன்? இந்த மதிகெட்ட பழக்க வார்த்தையை நம்பி நமது முயற்சியை இழப்பானேன். ஏதோ ஒரு காலத்தில் அமங்கலியை எதிர் சந்தித்த சமய்ம் கெடுதியும் சம்பவித்ததைக்கொண்டு அவ்விதவையால்தான் தனக்கு கெடுதி உண்டாயிற்றென்று மனஸ்தாபப்படுவானேன்? அமங்கலியோ, சுமங்கலியோ தனக்கு நேரிடும் கெடுதிக்கும் அவர்களுக்கும் என்னசம்பந்தம்? அமங்கலி எதிர்படாத காலையிலாவது, சுமங்கலியை எதிர்படாத காலையிலாவது, சுகமோ, அசுகமோ நிகழவில்லையா? இந்தசாமான்ய விஷயங்களை கவனியாது வீணே விதவைகள்மீது தனக்கு நேரிடும் கெடுதிக்கு பழிசுமத்துவானேன்? ஆதலின் சகுனங்களென்றவிஷயமே, கற்பிதமென்றுநன்குவிளங்குகின்றது

நற்சகுனங்களைப்பற்றி சற்று விசாரிப்பாம். ஒரு காரியத்தைக் குறித்து தீர்மானித்துக்கொண்டிருக்கையில், மணி அடித்தால், அது சுப சகுனமென்பார்கள். இது ஒரு பயித்தியக்காரத்தனமென்று எண்ணவேண்டும். நமது கோரிக்கை நிறைவேற வேண்டுமென்று ஆவலிருக்கையில், எந்த சொற்ப விஷயங்களாகிய மணி அடித்தல், தும்பல், முதலிய அற்ப விஷயங்கள், அந்த சமையத்தில் நேர்ந்தால், உடனே, "சுவாமி ரட்சிக்கு" மென்று சொல்லி, அது நல்ல சகுனமென்போம். இந்த மனப்பான்மையை, ஆங்கிலத்தில் (wish is father to the thought) என்பார். அதாவது, நமது கோரிக்கை படியே, நமது எண்ணமும், என்று எந்த அற்ப சொற்ப விஷயங்களையும் நமக்கு அனுகூலமென்று எண்ணிக்கொள்கின்றோம். இதுதான் இவ்வித சகுனங்களை கவனிப்பதற்கு காரணமென அறியவேண்டும்.

சில உயிர் அற்ற வஸ்துக்களை சந்தித்தால், அதனை சகுனங்களாக கருதப்படுகின்றன. 1. எண்ணைக்குடம் அசகுனமாம்! 2. சந்தனக்குடம் நற்சகுனமாம்! இது என்னகாரணத்தைப்பற்றியோ, அது தெரியவில்லை. எண்ணை வணிகர் தெருக்களில், அடிக்கடி எண்ணை குடங்கள் எடுத்துப் புறப்படுவோர் அனேகர். அந்த தெருக்களில், வசிக்கும் மக்களுடைய காரியங்கள் எல்லாம், புறப்படும்போது எண்ணை குடங்கள் எதிர்பட்டால்,கெடுதியாகின்றனவா என்று கேட்கின்றோம்? அல்லது கோயில் பக்கங்களில், அல்லது ஊர்கோலங்களில், சந்தனக்குடங்கள் அடுத்தடுத்து சந்திக்கலாம். அவைகளை சந்திக்கும் பேர்வழிகளுக்கெல்லாம், நன்மையே பயக்கின்றனவா எனவும் கேட்கின்றோம்? இத்தியாதிப் பொருள்களை சந்தித்தால் நல்ல சகுனமெனவும் கருதுதல், மதிகெட்ட பழக்கமே யொழிய, வேறில்லை. அப்படி சந்தித்தலால் வரும் நன்மையையும், தீமையையும் மேற்சொன்னவாறுபரீட்சித்துப்பார்க்கலாம். அதன் பயனை (Result) இலகுவில்அறிந்துக்கொள்ளலாம். அன்றுடமும் வாணியத்தெருக்களிலும், சந்தன மரங்கள் விளையும் இடங்களிலும் அடிக்கடி எண்ணை குடங்களையும், சந்தன மரங்களையும் சந்திக்கலாம். அதனை தினம் தினம் சந்திப்பவர்கள், எண்ணை வாணியரும், சந்தன தோட்ட வேலைக்காரர்களும் அனேகர் உளர். இவர்கள் கெட்டுப் போனார்களென்றாவது, லட்சாதிபதிகளானார்களென்றாவது, யாரும் கேட்டறியார், இதுவுமோர் மதிகெட்ட வழக்கச்சொல்லோயொழியவேறில்லை

இது நிற்க, ஒரு ஆச்சரியப்படத்தக்க சகுனச்சொல்லொன்றுண்டு. அது யாதெனில், பிணங்களை சந்தித்தால், நல்லசகுனமென்று கருதப்படுகின்றது. இது என்ன காரணத்தாலென அறியக்கூடவில்லை. சவம் நல்ல சகுனமாகக் கருத என்ன காரணமெனவும் விளங்கவில்லை. இதை யாராகிலும் விளங்க வைத்தால் நன்றாய் இருக்கும். நமக்கு ஒன்று தோன்றுகின்றது. இது ஒரு வேளை காரணமாய் இருக்கக்கூடுமோ அதை நிச்சயமாக சொல்ல முடியாது. இருந்தாலும், சொல்லத்துணிவோம். சாவு எப்போதுமே விசனகரமான விஷயம். அதற்கு எதிர்மரையான சம்பவம் சுபகாரியமாகும். அசுபத்தைக் கண்டால், சுபமுண்டாகவேண்டுமென்ற எதிர்மரை எண்ணத்தால் பிணங்களை சந்தித்தால், சுப சகுனமென்று எண்ணினார்கள் போலும்! இது நமது உத்தேசமல்லாது, ஆதாரமானதல்ல. இந்த சுபா அசுப சகுனங்கள், நமது மனத்திருப்திக்காக எழுந்த பழக்கச்சொற்களே யொழிய, அவைகளில் எந்த சத்துமில்லை (Unsubstantial) என்பது திண்ணம்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமெனபதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சித்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 7. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0

ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.

மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

---

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

---

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யங்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

---

## அபான வெடி அல்லது வாய்வு பேதி.

இதனை சாப்பிட்ட சில நேரத்திற்குள் தேகத்திலுள்ள தசவாயுவின் மிகுதியை அபானத்தின் வழியே போக்கிவிடும். சிலருக்கு 1 வேளை மருந்தில் 40—50 தடவை வரை காத்து பரிகிறது. வாதம், வாய்வு உபாதை உடனே தீரும். புட்டி 1க்கு ரூ. 1.

1. "தங்கரசம்" சகலவியாதிகளைப் போக்கும்; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 2. "St. ஜெவியர் சால்ட்" சுகபேதி சர்வரோக சங்காரி; புட்டி 1க்கு ரூ. 1-4-0. 3. "சந்தனுதித் தைலம்" நல்ல குளிர்ச்சியை தரவல்லது; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 4. "G. L. கல்நார் பற்பொடி" தந்தவியாதிகளுக்கு சஞ்சீவி; டஜன் 1க்கு ரூ. 1-8-0, பெரியது ரூ. 3-0-0.

கமிஷன் ஏஜெண்டுகள் தேவை. கியாட்லாக் இனும்.

டாக்டர் ஜி. எல். சாமி,
வரகனேரி, திருச்சினுப்பள்ளி.

---

## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

---

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.